
தில்லைத் திருநடனம்

பி.ஸ்ரீ



பென் லெண்ட்
பப்ளிஷர்ஸ்

தில்லைத் திருநடனம்

(ஆனந்த எல்லையில் தனிப்பெருங்கூத்து)

தவத்திரு. இராமநாத அடிகளுக்கு
வணக்கத்துடன்
அன்பளிப்பு.
பி.ஸ்ரீ
10.1.70

பி. ஸ்ரீ

பென்லெண்ட் பப்ளிஷர்ஸ்
57, ஜானி ஜான் கான் ரோடு,
சென்னை - 14.

முதற்பதிப்பு : ஜனவரி, 1971

விலை ரூபாய். 1-50

Penland Publishers
57, Jani Jhan Khan Road, Madras-14.

Printed at Novel Art Printers, Madras-14.

 5-1

தில்லையின் எல்லையில்

'மரணத்துக்கு நடுவில் நாம் உயிரோடு வாழ்கிறோம்' என்று ஒரு வாக்கியம். எங்கே பார்த்தாலும் எமன் கூத்தே! பெரிய பெரிய சாம்ராஜ்யங்கள் எல்லாம் அழிந்து போயின. இறுமாப்புடன் தலை நிமிர்ந்து, 'நான் மகாவீரன்; நான் சக்கரவர்த்தி' என்று ஆணவம் பேசியவர்கள் பிணமாகி விட்டனர். 'உயிரும் தருமனையே (யமதர்மனை) நோக்கும்' என்பது ஆழ்வார் வாக்கு.

யமன் வந்து விட்டால், 'கூகா' என்று அழுது புலம்புவது தவிர வேறு என் செய்ய வல்லோம்? 'வல்லான் வகுத்ததே வாய்க்கால்' என்று சொல்லுகிறோமே, அத்தகைய வல்லவர்களும் எமன் கூத்துக்கு அஞ்சி அடி பணிந்தார்கள் என்பதைத் தவிர வேறு என்ன சாதித்து விட்டார்கள்?

ஆனால் மரண பயத்திற்கு மருந்து இல்லையா? 'மூவாச் சாவா மருந்து' ஒன்று உண்டு என்கிறார் குமர குருபர அடிகள்.

'கூ. கா, என்று குரைப்ப தல்லால், சமன் (யமன்)
வாவா என்னில் 'வரேம்'என வல்லிரே?
தேவேசன் பயில் தில்லையின் எல்லையில்
சேர்வீரேல் அது செய்யவும் வல்லிரே!

யம பயத்தையும் பயமுறுத்தும் மகானுடைய வாக்கு இது. மரணத்திற்கு முன்னே மனிதன் கேவலம் வேட்டையாடப்பட்ட விலங்கின் பரிதாப நிலைக்கு

வந்து விடுகிருனும். 'கூ.கா.' என்று புலம்புவதைக் குரைப்பது (குலேப்பது) என்று குமரகுருபரர் குறிப்பிடுவதைக் கூர்ந்து நோக்கலாம். எமன் வா, வா, என்ருல் வரமாட்டோம் என்று சொல்லும் துணிவு தான், அப்பர் சுவாமிகளை.

நாமார்க்கும் குடிஅல்லோம்;
நமனை அஞ்சோம்

என்று சொல்ல வைத்தது.

அப்பரின் இந்தத் துணிவுக்கு அடிப்படை எது? பக்தியின் சக்தியே. பக்தி வழிபடும் வடிவங்களில் மிகச் சிறந்தது நடராஜ வடிவம் என்று கலைஞர்கள் கருதுவர். நடராஜனைக் குமரகுருபரர் 'தேவேசன்' என்கிருர். திரு நடனம் நடைபெறும் அரங்கைத் தில்லை என்கிருர். இந்த எல்லையை அணுகினுல் போதுமாம், பயம் எனும் பிசாசு அஞ்சி விலகி ஒடுவதற்கு.

எத்தகைய நம்பிக்கை ஊட்டக்கூடியது இக் கொள்கை பாருங்கள்! யமன் கூத்தைத் துச்சமாகக் கருதுவதற்கு நடராஜனின் ஆனந்தக் கூத்து அரும் பெருந் துணையாகும் என்பது சிவநேசர்களின் கொள்கை. இதே கருத்தை வைணவ சமயத்தின் ஒரு மூலக் கருத்தாகவும் கொள்ளலாம்.

நாவலிட்டு உழிதர்கின்ருேம்
நமன்தமர் தலைகள்மீதே!

என்பது தொண்டரடிப் பொடியாழ்வார் வாக்கு. பகவானுடைய திருப்பெயரை நாவில் இட்டுச் சுவைக்கும் போது யம பயம் கொஞ்சமும் இல்லாமல் போகிறதாம்.

 5-1

இறைவன் திருப்பெயரைச் சுவைத்த வண்ணம் யமன் தலையிலும், அவனது பரிவாரங்களின் தலையிலும் அடியிட்டுத் துவைக்கிறோம் என்கிறார் ஆழ்வார்.

சுரம் இருந்தால் பால் ருசிக்காது; பயம் இருந்தால் வாழ்க்கை ரசிக்காது. பயங்களில் எல்லாம் முதன்மை யான யம பயத்தை அறவே ஒழித்து வாழ்க்கையை ஜயம் பெறச் செய்வது 'ஆனந்த எல்லையில் தனிப் பெருங்கூத்து' இக்கூத்தைக் கண்டவர் மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார், என்பது பெரியபுராணம் பாடிய சேக்கிழார் பெருமானின் வாக்கு.

இத்தகைய ஆனந்தக் கூத்தின்-நடராஜ தத்துவத்தின் பொருளையும் பயனையும் ஓரளவு சாதாரணத் தமிழ் வாசகர்களுக்கும் உணர்த்துவது இச்சிறு நூலின் பெரு நோக்கு. கதையானாலும் சரி, தத்துவமானாலும் சரி—அது பாமர மக்களையும் வசீகரிக்க வேண்டும். இந்த விதிக்கு நடராஜ தத்துவமும் விலக்கு அன்று.

ஒரு பெருங்கடல்; அதில் அரக்கர்களும் மூழ்கிப் போவார்கள்; எனினும் குழந்தைகளும் அச்சமின்றி ஆடிப்பாடிக் கரையிலிருந்து அலைகளை 'வா, வா' என்று அழைத்து விளையாடுவார்களாம். அத்தகைய மகாசமுத்திரம் நடராஜாவின் ஆனந்த தாண்டவம்.

ராட்சஸ மூளைகளும் மூழ்கிப் போகும் இந்த ஞானப் பெருங்கடலின் கரையோரமாக நின்று சிப்பி பொறுக்குகிறார் இந்த ஆசிரியர்.

—பதிப்பகத்தார்

பொருளடக்கம்

ஞான சூரியோதயம்

'வால் போச்சு, கத்தி வந்தது!' என்று பாட்டிமார் கதை சொல்லுகிறார்கள் குழந்தைக்கு. இதே கதையை விஞ்ஞானமும் சொல்லுகிறது என்றால் அது ஒரு புதிர் போட்ட மாதிரி இருக்கிறதல்லவா?

நவீன பரிணாம வாதம் விஞ்ஞானத்தின் ஓர் உயிர் நிலைக் கொள்கை. இதை எவல்யூஷன் (Evolution) என்பர். சார்லஸ் டார்வின் என்ற பிரபல விஞ்ஞானி கண்ட விஞ்ஞான உண்மை இது. இந்த வாதத்தைப் பிரம சூத்திரம்போல் சுருங்கச்சொல்லி விளங்க வைக்க முயன்றார் நண்பர் ஒருவர்:

வால் குறுகி;
கூன் நிமிர்ந்து;
மூளை பெருகி............

ஏணியிலே ஏறியதாம் ஒரு குரங்கு. அது வாலை இழந்தது. கூனையும்தான் இழந்தது. மூளை பெருகி விட்டது. இரட்டை நஷ்டம், லாபம் ஒன்றே. ஆனால் மூளை பெருகி வருகிறதே அபாயகரமாக, குரங்காகவோ குரங்கை ஒத்த பிராணியாகவோ படிப்படியாகப் பரிணாம ஏணியில் ஏறிவந்த மனிதப் பிராணிக்கு! இது நவ நாகரிகத்தின் இன்றைய நிலை.

ஆம்; வால்போச்சு, அறிவுக் கத்தி மிகமிகக் கூர்மை யாகத் தீட்டப்பெற்று வந்து சேர்ந்திருக்கிறது மூளை

யாகிய பேழையிலே. பழைய பாட்டிகதைக்கு ஒரு விஞ்ஞானப் பொருள்.

இந்த மூளை இப்படிப் பெருகுவதற்கு முன்பே முளைத்து விட்டது பக்தி. பகுத்தறிவுக்கும் முற்பட்டது பக்தி. ஆடைக்கு முந்தி அலங்காரம், பாஷைக்கு முந்திச் சங்கீதம் என்பது போலே.

வால் குறுகி கூன் நிமிர்ந்ததும் வானத்தைப் பார்த்தது மனிதக் குரங்கு. ஆம்; நிலத்தையே நோக்கி நோக்கி, வேட்டையாடியும் வேட்டையாடப்பட்டும் கவலைப்பட்டிருந்த மனிதனுக்கு, விண்வெளியில் வாரி இறைத்திருக்கும் வைர மணிகள்போல் ஜொலித்த நட்சத்திரங்கள் கண்சிமிட்டிச் சொன்ன இரகசியம்தான் என்ன? சூரியோதய அஸ்தமனங்களும், சந்திர உதயங்களும் ஊட்டிய நம்பிக்கைதான் என்ன? 'மனிதா, அதிசயமாய்ப் பார்க்கிறாயா அறிவுக் கண் கொண்டு? இதில் இருக்கிறது உன் ஆற்றல், உன் வெற்றி, இப்படி யொரு மோனப்பிரசங்கம் விண்ணகத்திலே. கவலைக்கு ஒரு மருந்து கிடைத்து விட்டது. அறிவு மலரும்போதே, அது மலர்வதற்குச் சற்று முன்பே, கவலை தின்ற நெஞ்சிலே பக்தி பிறந்து விட்டது.

வாதங்களும் எதிர் வாதங்களும்

பக்தி மட்டுமா? ஆத்திகம் தோன்றிய போதே நாத்திகமும் தோன்றிவிட்டது. 'மனக்கலத்திற்காக ஆகாசத்தை நோக்கித் தொழுவதால் பயன் என்ன?' என்று கேட்டது நாத்திகம்.

வானத்திற்குச் செவிகள் இல்லை, அது கேட்காது, பதில் சொல்லாது. இல்லை என்று கொட்டை எழுத்தில் அந்த வான வளையத்தில் மூலைக்கு மூலை எழுதியிருக்கிறதே தெரியவில்லையா?

எனினும் பக்தி பேசுகிறது ஒரு நம்மாழ்வார் வாயிலாக! 'அலப்பாய் (மனக்கலக்கமாய்) ஆகாசத்தை நோக்கி அழுவன், தொழுவனே!' என்று.

நம்பிக்கை பேசுகிறது சிவநேசர் வாயிலாக, 'அழுது முறையிட்டால் அம்பலத்தே கேட்கும்' என்று, அழுது முறையிடும்போது ஆரவாரம் ஏன்? அழு கண்ணீர் போதாதா அம்பலத்தில் அறிவிப்பதற்கு? உள்ளுருகி வரும் வாசகத்துக்கு அண்மை, சேய்மை என்று உண்டா?

நாத்திகம் பின்வாங்குமா? அவ நம்பிக்கையோடு கைகோத்து நின்று கூத்தாடிய வண்ணம், அழுது முறையிட்டால்...என்பதற்கு எதிர் உரையாக,

உழுது பயிரிட்டால்
உள்ளபடி விளையும்

என்று முழக்குகிறது.

எதிர்வாதம் புரிகிறது பக்தி; அப்பர் வாயிலாக:

மெய்ம்மையாம் உழவைச் செய்து
விருப்பெனும் வித்தை வித்தி,
பொய்ம்மையாம் களையை வாங்கி,
பொறையெனும் நீரைப் பாய்ச்சி...

ஆம்; பக்தரும் உழவரே! விவசாயம் வேண்டியது தான், ஞான விவசாயமும் வேண்டியதுதான் என்கிறார் பக்தர்.

என்ருலும், பக்தர்களைச் சோம்பேறிகள் என்று பரிகசிக்கிறது பகுத்தறிவு—இல்லை, இல்லை. அவ நம்பிக்கை:

மாடு கட்டி வைக்கோல் போடு,
காடு வெட்டி நஞ்சை பண்ணு;
பாடுபட்டு உழைத்தால் அன்ருே
வீடு கட்டி வாழலாம்?

வீடும் வாசலுமாய் வாழ வேண்டாம் என்று சொன்னது யார்? இங்கு வீடு கட்டுவது போல் முக்தியாகிய மேல்வீடும் வேண்டாமோ? கவலைகளை விட்டுத் தங்குவதற்குத் தானே வீடு. முடிவில் விட்டு விடுதலையாகி நிற்பாய் அம்பலத்திலே என்கிருர் தொண்டர்.

சர்வ சந்தேக வாதியோ,

அம்பலமாவது ஆகாசம்,
உற்றுப்பாரு;
அருள் இல்லை, பொருள் இல்லை;
கண்டுதேறு

என்று சுட்டிக் காட்டுகிருன். நாமும் உற்றுப் பார்க்கிருேம். சூனியத்தைத்தான் காண்கிருேம்—வெறும் பாழ்; விண்வெளிப் பாழ். ஆனுல் தேறித்தெளிய இதில் என்ன இருக்கிறது?

சாதாரண மனிதன் பார்க்கிருன்; விஞ்ஞானி உற்றுப் பார்க்கிருன்; மெய்ஞ்ஞானியோ ஊடுருவிப் பார்க்கிருன். ஊடுருவிப் பார்க்கும்போது உண்மை காண்கிருன். உண்மை கண்டு தெளிந்து தேறுகிருன்.

தூக்கிய பாதம் கண்டோம்,
ஜோதி கண்டோம்;
சுத்தவெளிக்கு உள்ளேஒரு
கூத்தும் க்ண்டோம்

என்ற தெய்விகக் குதூகலப் பார்வையிலே, சற்றுத் திரை விலகி நடராஜ தரிசனம் கிடைத்து விடுகிறது. வெறும் பாழான விண்வெளி அன்று; ஞானவெளி, ஞான ஆகாசம், ஞான சூரியோதயம்.



2. துயிலும் கருணையும், ஆடும் அற்புதமும்

சடையப்ப வள்ளலின் தருமம் கம்பனை மட்டுமா ஆதரித்தது? மற்றும் பல புலவர்களையும் கலைஞர்களை யும் வாழ வைத்தது. சாதாரண மக்களுக்கும், பசி தீர்த்தது. வள்ளற் பெருமானின் வண்மை சோழ மண்டலத்தை மட்டுமா, இலங்கையையும் ஒரு சமயம் பஞ்சம் தீர்த்துக் காத்தது. அதனால்,

மண்ணவர் வறுமை நோக்கி மருந்து

என்று கொடைவள்ளலைக் குறிப்பிடுகிறான் கவிவள்ளல்.

சடையன் என்ற தரும தேவதை தாங்கியது வையகத்தை என்று நாவாரத் துதித்தனர் நாவலரும் பாவலரும்.

பரதேவதைகள் இரண்டு என்பர். திருமாலையும் சிவபெருமானையும் தரணி தாங்குதல் அத்தெய்வங் களின் பொறுப்பு என்பர். அந்தப் பொறுப்பைத் தனதாக்கிக் கொண்டதாம் சடையனது வள்ளன்மை. ஆகவே பொறுப்புக் கவலை விட்டதாம் திருமாலுக்கும் சிவனுக்கும்.

அறிதுயில் அமர்ந்த மூர்த்தியின் துயிலுக்குக் குறைவு இல்லை, கவலையின்மையால் ஆடும் பெரு

மானின் ஆனந்தக் கூத்தும் கவலையின்மையால் அற்புதமாக நிகழலாயிற்று. இப்படிப் பாடுகிறார் சடையப்பனது தரும சிந்தையைப் பாடும் புலவர் ஒருவர்.

சிதம்பரம் பொன்னம்பலம் அல்லவா?

கருதுசெம்பொனின் அம்பலத்திலொர்
 கடவுள்நின்று நடிக்குமே;
காவிரித்திரு நதியிலே ஒரு
 கருணைமாமுகில் துயிலுமே

என்கிறார் புலவர். 'ஏன்?' என்பதையும் தெளிவு படுத்துகிறார்,

சடையன் என்றொரு
 தருமதேவதை வாழவே

என்று, தம் செய்யுளின் ஈற்றடியிலே.

உண்மையின் இரண்டு சொரூபங்கள்

உண்மையே கடவுள் என்பதை வற்புறுத்தினர் காந்தியடிகள். இந்த உண்மைக்கு முகங்கள் எத்தனை! குரல்கள் எத்தனை, எத்தனை! உண்மையின் வசீகர வடிவங்களில் திருமாலையும் நடராஜாவையும் சிறப்பாகக் குறிப்பிடலாம்.

யோக நித்திரையில் அமர்ந்திருப்பது திருமாலின் அருள் வடிவம். நடராஜப் பெருமாளின் கருணை வடிவமோ ஆனந்தக் கூத்து. இந்த இரண்டு வடிவமும் எத்தனையோ சிந்தனைச் சுடர்களை ஞானபக்தர்களின் உள்ளத்தில் தோற்றுவிக்கின்றன. இவற்றுள் முக்கியமாக நாம் உணர்ந்து கொள்ளத்தக்கது ஒன்று உண்டு.

உலகம் கோன் இல்லாத மந்தை அன்று, மேய்ப்பவன் உறங்குவது போல் காணப் பட்டாலும், அவனது சிந்தனையெல்லாம் மந்தையைப் பற்றித்தான். இந்தத் தத்துவத்தை திருமாலின் அறிதுயில் புலப் படுத்துகிறது. அந்தர்யாமியாக உயிர்க் குலத்துடன் ஒக்க நின்று உலகத்தைக் காப்பவன், யோக நித்திரையில் உலக நலனைக் குறித்துச் சிந்தை செய்த வண்ணமாய் இருக்கிருனும். இது அவன் கருணை என்பர் திருமாலின் மெய்யடியார்கள்.

இப்படியே ஆடும் கூத்தும் ஒரு மகத்தான உண்மையை உணர்த்துகிறது. உலகப் படைப்பு எல்லாம் பொருளற்ற, ராக தாளங்களுக்கு இசையாத, ஒரு பேய்க்கூத்து அல்ல, வெறியாட்டம் அல்ல. ராக தாளங்களுக்கு இசைய நடைபெறும் ஓர் ஆனந்த தாண்டவம்.

சயனத்திருக் கோலத்தில் அமர்ந்திருக்கும் அரங்க நாதனை ஆழ்வார் ஒருவர் உலகங்களுக் கெல்லாம் ஓர் ஆவி என்கிருர். இந்த ஆவி ஒவ்வொருவர் நெஞ்சிலும் துயிலுகின்றது. இதற்குப் பள்ளியெழுச்சி பாடி விழிக்கச் செய்பவனே விழிப்புடன் தொண்டு நெறியில் உண்மையாக முழுக்க முழுக்க ஈடுபடக்கூடும். இந்த விதமாக என்றும் விழிப்பும் கூத்துமாக இருக்கும் சிவபெருமானுக்கும் திருப்பள்ளியெழுச்சி பாடி விழிப்புடன் தொண்டாற்றுகிருர்கள் சிவநேசர்கள். நடராஜ தத்துவ ஞானமும், 'அலைகடலே! பள்ளியெழுந்தருளாயே, என்று துயிலுணர்த்தி அனுபவிக்க வேண்டியதுதான்.

உண்மையின் உருவத் திருமேனி

சிவாகமங்களும் அவற்றின் வழி நூல்களும் சிவ பெருமானது உருவத்திருமேனியை 'நடராஜர், சந்திரசேகரர், உமா மகேசர், ரிஷபாரூடர், கலியாண சுந்தரர், பிட்சாடனர், அர்த்த நாரீசுவரர், சோமாஸ் கந்தர், தட்சிணு மூர்த்தி, முதலான இருபத்தைந்து வகைப்படும் எனக் கூறுகின்றன.

சில மத நூல்கள் 'கடவுள் உருவமில்லாதவர், விக்கிரகங்களாலும் சிலைகளாலும், வழிபடத்தக்கவர் அல்லர், இது அஞ்ஞான வழி' என்று கூறுகின்றன. இது தவறு. காண்பதைக் காணுததற்கு ஒரு நினைவுக் குறியாகக் கருதுவது பொருத்தமே என்று கார்லைல் முதலிய பேரறிஞர்கள் கூறியுள்ளனர்.

விக்கிரக வழிபாட்டை நிந்திக்கும் மத நூல்களும் தம்மை மறந்து, கடவுள் ஒரு ஜோதியாகவோ, தீச் சுவாலை வடிவமாகவோ, தோன்றுவது உண்டு எனக் கூறுவதும் உண்டு. புருவடிவமாக இறங்கினுன் இறைவன் என்றும் கூறுகின்றன. மேலும் கடவுளை உருவமற்றவர் என்பவர்கள், ஆகாசம் போலாவது, கடவுளைக் கற்பனை செய்கிருர்கள். ஏதாவதொரு மனவடிவில் அல்லது மனவிக்கிரகத்தில் கற்பித்துக் கொள்வர். மனவிக்கிரகம், மரத்தினுல் அல்லது உலோகத்தினுல் அமைந்திருக்கும் விக்கிரகத்தைக் காட்டிலும் மயங்க வைக்கும் என்பதும் சிந்தனைக் குரியது.

கடவுளை நேராகக் கண்டவர்கள் என்று ஞான சம்பந்தர் முதலான பழைய காலத் தொண்டர்களைக்

குறிப்பிடுவது போல் இராமகிருஷ்ண பரமஹம்சர் முதலான தற்காலத் தொண்டர்களையும் குறிப்பிடுகிறார் கள். இவர்கள் ஆண்டவனது உருவத்திருமேனிகளில் ஏதாவது ஒன்றைத் தரிசித்தவர்களே என்பர். 'கள்ளம் போனால் உள்ளது காணும்': அந்த உள்ளது ஏதாவது ஒரு உருவத் திருமேனியில் காணப்படுவது இயல்பே என்று அநுபூதிக் கலைஞர்கள் கருதுகிறார்கள்.

இறைவனது உருவத்திருமேனி நமது உருவம் போல் மாயாகாரிய வடிவம் அல்ல; நிறைந்த ஞானமும் செயலும் உடைய முதல்வன் உயிர்களிடம் வைத்த கருணையால், தான் நினைத்த ஒரு திருமேனியைத்தாங்கி வருவான் என்பது அநுபூதிக் கலைஞரின் துணிபு.

சேக்கிழார் பெருமான், நடராஜப் பெருமானின் வடிவம் குறித்து ஓர் அருமையான செய்யுளில் தம் கருத்தை வெளியிட்டிருக்கிறார்:

கற்பனை கடந்த சோதி,
கருணையே வடிவமாகி
அற்புதக் கோலம் நீடி,
அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோமம் ஆகும்
திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புறு நடம்செய் கின்ற
பூண்கழல் போற்றி போற்றி.

சொல்லும் மனமும் கடந்து நின்றவன் கடவுள். அக்கடவுள் ஆன்மாக்கள் மீது வைத்த பேரருளால் அவ்வருளே வடிவமாகத் தோன்றுவான். இது நடராஜ வடிவம் என்பது சேக்கிழார் குறிப்பு.

நடராஜப் பெருமானுக்கு உரிய தலம் சிதம்பரம் என்பர். இது முன்னாளில் காடாக இருந்ததாம். தில்லை வனம் என்றும் வழங்கப்பட்டது. வியாக்கிர பாதர், பதஞ்சலி என்ற முனிவர்கள் தவம் கிடந்து நடராஜப் பெருமானைக் கண்டு பேறு பெற்றனராம். இவர்களில் வியாக்கிரபாதர் புலிக்கால் முனிவர் என் றும், பதஞ்சலி ஆதிசேஷனுடைய அம்சம் என்றும் கூறுவர்.

சித்+அம்பரம்=சிதம்பரம். அம்பரம் என்றால் ஆகாசம், வெளி. இச்சொல், அம்பலம் எனத் திரிவு பட்டும் வழங்கும். சிதம்பரத்தைச் சிற்றம்பலம் என் றும் கூறுவர். இதய கமலத்திலே சிதாகாச வடிவ மாகிய பரவெளி அமைந்திருக்கிறது என்றும், இது எல்லாவற்றுக்கும் ஆதாரம் என்றும் கூறுவர். இதன் நினைவுக்குறியே சிதம்பரம் என்பர்.

'அவனன்றி ஓரணுவும் அசையாது'. அவன் உயி ருக்கு உயிராகி நின்றபையால், அவன்மேல் பட்ட அடி சர்வஜீவ கோடிகள் மேலும் பட்டது. இது, பிட்டுக்கு மண் சுமந்த கதையில் நாம் காணும் இறைவனின் திருவிளையாடல். இத்தகைய இறைவன் திருநடனத் தினாலே படைப்பு முதலான தொழில்களையெல்லாம் நடத்துகிறான் என்பர்.

அலகிலா உயிர்கட்கு எல்லாம்
அறிவினை ஆக்கி, ஐந்து
நலமிகு தொழில்க ளோடு
நாடகம் நடிப்பன் நாதன்.

தோற்றப்பொருள் அனைத்தினுக்கும் ஆகாசம் ஆதாரம் அல்லவா? இந்த ஆகாசம் ஒலி பற்றி எழுவது என்றும், நடராஜப் பெருமானுடைய கையில் ஏந்திய டமருகம் ஆகாசத்துக்கு உற்பத்தி ஸ்தானம் என்றும் கூறுவர். ஆகவே அனைத்துப் பொருள்களுக்கும் உற்பத்தி ஸ்தானம் டமருகம் என்பர்.

நடராஜ வடிவத்தின் அபயகரம் (அபயம் அளிக்கும் கை), 'அஞ்சேல்' என்னும் குறிப்பினைக் காட்டிக் காத்தல் தொழிலை மேற்கொள்ளுகிறது என்பர். கையில் ஏந்திய தீ சங்காரத் தொழிலாகிய விடுதலைத் தொழிலைச் செய்கிறது. முயலகன் ஆணவத்தின் வடிவம் என்றும், அவனை மிதித்த திருவடி மறைத்தல் தொழிலைக் காட்டுவது என்றும் கூறுவர்.

தூக்கிய பாதத்தின் நிழலில் இக்கலியுகத்திலும் நந்தனும் மாணிக்க வாசகரும் இடம் பெற்று, நமக்கெல்லாம் வழிகாட்டிகளாயினராம்.

ஐந்தொழில்களும் ஆனந்த நடனத்தினால் நடைபெறுகின்றன என்பதன் உட்பொருள் தான் என்ன? சூத்திரப் பாவையானது கயிற்றை இயக்கி ஆட்டப்படுவதுபோல் நம்மை ஆட்டுவிக்கிறான் நடராஜன் என்பது ஞானிகளின் திருவுள்ளம். திருநடனத்தைத் தரிசித்த மெய்ஞ்ஞானிகள் கண்ட மேலான உண்மைப் பொருள்.

இத்தகைய பரம ஞானியான அப்பர் சுவாமிகள் தாம் நாவுக்கு அரசராதலின், தாம் கண்ட உண்மைப் பொருளை அமுதத் தமிழாக வடித்துக் காட்டுகிறார்.

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயும்
குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியில்
பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற்பாதமும்
காணப் பெற்ருல்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த
வையகத்தே.

நடராஜா என்ற ஆனந்தக் கலைவடிவைப்போல், உலகில்வேறு எங்கே பார்க்க முடியும்? உலகமே ஒரு நடன மேடை. 'ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே' 'அண்டமெலாம் சாட்டையிலாப் பம்பரம்போல் ஆட்டுவிக்கும் குற்ருலத்து அண்ணலார்'. இப்படியெல்லாம் ஆடும் அற்புதத்தை வருணித்திருக்கிருர்கள் பக்தமணிகள்.

கம்பன் கண்ட நடராஜ வடிவம்

நடராஜா என்ற கலைவடிவத்தை ரசிக்கவாவது மனிதப் பிறவியும் வேண்டியது தானே. இக்கலை வடிவத்தை ரசித்த கலைஞருள் கலைஞன் பிற்காலத்தில் கவிச்சக்கரவர்த்தி' என்று போற்றப்பட்ட கம்பன் என்பதை மிகச் சிலரே அறிந்திருப்பார்கள். இவன் இவ்வடிவத்திலும் தத்துவத்திலும் ஈடுபட்டிருந்த சமயத்தில் பாடிய பாட்டொன்று கம்பராமாயணம்—பால காண்டத்திலே இடம் பெற்றிருக்கிறது.

கடற்கரையிலிருந்து கிழக்கே எழுகின்ற கதிரவனைப் பார்க்கிருன் கவிஞன். எண்ணரிய வேதங்கள்

இசைபாட, அந்த இசையுடன் கட்புலனுகாத கின்னரர்கள் பாடும் இசையும் சங்கமித்து, 'பலர் புகழ் ஞாயிறு' என்ற சூரிய வடிவத்தைச் சிறப்பிப்பதையும் கற்பனைக் கண் காண்கிறது. விண்ணவர்களும், முனிவர்களும் வேதியரும், 'காயத்திரி' ஓதித் தோத்தரிக்கும் காட்சியும் அகக்கண்ணுக்கும் புறக்கண்ணுக்கும் தோன்றுகிறது.

இந்தக்கதிரொளிவடிவும், மெல்ல மெல்ல நடராஜ வடிவத்தைப் புலப்படுத்துகிறது!. வானத்தை அரங்க மேடையாகக் கொண்டு, நடம் புரியும் நடராஜா காட்சியளிக்கிருர்.

அருக்கன் ஆவான்
அரன்உரு அல்லனோ?

என்ற அப்பரின் அருள்வாக்கு எதிரொலி செய்கிறது சித்தக் கடலிலே.

உதயசூரியன் 'கண்ணுதல் வானவன்' தான் என்பதற்கு, இருள் கிழித்துத் தோன்றிய அந்த நெற்றித் தனிக் கண்ணின் நெருப்பை ஒத்த காட்சியே சாட்சி தான். ஆட்டம் ஆரம்பமாகிறது. ஆடிவரும் கதிரொளிக் கூத்துக்குத் தக்கபடி மத்தளம் கொட்டி முழக்குகிறது அலைகடல்.

விசை ஆட்டத்தில் பொன்மயமான சடைகள் விரிந்தாற்போலக் காண்கின்றன கதிரவனின் செங்கதிர்கள். 'காலை இள வெய்யிலில் காண்பதெல்லாம் இன்பமன்ருே?' ஆம்; இன்பம், பேரின்பம், ஆனந்தம். ஆனந்தக் கூத்தின் ஆனந்தம். ஆடரங்கு ஆகிய

அம்பலம், அதிரும் கடலாகிய மத்தளம், அலைகளின் பாடல்கள், சூரிய உருவில் அலைகடலோடு ஆடும் நடனம்-எல்லாம் ஆனந்தம், ஆனந்தம்தான்.

கம்பன் உள்ளம் தில்லை அம்பலத்தே திரு நடம் புரியும் கண்ணுதற் கடவுளிடம்—ஆனந்த எல்லையில் தனிப் பெருங் கூத்தின் பால்—அடைக்கலம் அடைந்து விட்டது.

இந்த நிலையில் உதிக்கின்றது இசைக் கடலில் ஓர் அற்புதக் கவிதை, ஆனந்தக் கூத்தனின் டமருகத்தி லிருந்து புறப்படுவது போலே.

எண்ணரிய மறையினொடு
கின்னரர்கள் இசைபாட,
உலகம் ஏத்த
விண்ணவரும் முனிவர்களும்
வேதியரும் கரம்குவிப்ப,
வேலை என்னும்
மண்ணுமணி முழவதிர
வானரங்கின் நடம்புரிவான்
இரவி ஆன,
கண்ணுதல் வானவன்கனகச்
சடைவிரிந்தால் எனவிரிந்த
கதிர்கள் எல்லாம்.

பாடும் அற்புதம், ஆடும் அற்புதத்தில் கலத்து லயித்து விட்டது.

3. எது திருச்சிற்றம்பலம்?

'திருச்சிற்றம்பலம் திருச்சிற்றம்பலம்' என்று சைவர்கள் ஏதோ ஒரு மூல மந்திரத்தை ஜபிப்பது போல் சொல்லுவதைப் பலரும்கேட்டிருப்பர். திருமுறை களையோ, வேறு நூல்களையோ ஓதத் தொடங்கும் போதும், ஓதிமுடிக்கும்போதும், அவர்கள் 'திருச்சிற்றம் பலம்' என்பர். எழுதும்போதும் திருச்சிற்றம்பலம் என்று தொடங்குவர், முடிப்பர்.

அம்பலத்திலிருந்து 'பஞ்ச கிருத்திய நடனமாகிய (ஐந்தொழில்) திருக்கூத்து' நடை பெறுகின்றது. இங்கே அம்பலம் சபை. அம்பலம் தான் எங்கே? ஆட்டம் இயக்கம் அசைவு உள்ள இடமெல்லாம் அம்பலம். மேலும்

அம்பலம் ஆவது
அகில சராசரம்

என்பது திருமூலர் வாக்கு.

அண்ட பிண்டங்களாகிய பூதங்களின் இயக்கமும் அம்பலக் கூத்தே, ஆண்டவனின் நடனமே. பொறி களின் இயக்கமும் புலன்களின் இயக்கமும் அம்பலத் திருக் கூத்தே. செயற்படும் இந்திரியங்கள் இயங்கு வதும், அந்தக் கரணங்கள் இயங்குவதும் திருக் கூத்தே.

திரு+சிறு+அம்பலம்=திருச்சிற்றம்பலம். சிறிய அம்பலம் சிற்றம்பலம், பெரிய அம்பலம் பேரம்பலம். இங்கே சிறுமை பெருமை என்பன முறையே சூட்சுமம் அல்லது நுண்மையும், பருமை அல்லது ஸ்தூலமும் ஆகும். மிக நுண் பொருள்கள் ஆகிய அந்தக்கரணம் முதலியன சிற்றம்பலம் ஆகும். மிக நுண்ணிய தத்துவம் 'சித்து' என்ற உயிரின் அறிவு. அது சித்சபை சிதம்பரம். எனவே உயிரறிவு-நம் அறிவு, ஆண்டவனின் நடனசபை, ஆடரங்கு.

அறிவுக்கு அறிவாய் உள்ளது பேரறிவு, இது நீக்கமற எங்கும் நிறைந்துள்ளது. இகபரம் இரண்டினும் உயிருக்கு உயிராய் உள்ளது. எனவே சிதம்பரம் அல்லது திருச் சிற்றம்பலம் இல்லாத இடமே இல்லை. சிதம்பரத்தைப் பூமியின் இதயஸ்தானம் என்பர்.

எங்கும் திருமேனி,
எங்கும் சிவசக்தி;
எங்கும் சிதம்பரம்;
எங்கும் திருநட்டம் (நடனம்).

என்பது திருமந்திர ஆசிரியரான திருமூலரின் வாக்கு.

தலத்தின் தொன்மை

மன்று என்பது இத்தலத்தின் ஒரு பெயர், மன்றம் என்றும் திருமன்றம் என்றும் கூறுவர். குகை என்றும் இதற்கு ஒரு பெயர் உண்டு. மெய்ப்பதம் என்றும், அற்புதம் என்றும் கூறுவதும் உண்டு.

இதனைச் சபை என்பர். சிவாலயம் என்றே சிறப்பித்துக் கூறுவதும் உண்டு. 'பொது' என்று சமரச நெறி தோன்றப் பேசுவதும் உண்டு. இன்னும் புலியூர், பெரும் பற்றப்புலியூர் முதலிய பெயர்களாலும் இத் தலத்தைக் குறிப்பிடுவதுண்டு.

இப்பெயர்களே தலத்தின் தொன்மையையும் உணர்த்துவன. வேத முடியாகிய உபநிஷதங்களில் மைத்திரேய உபநிடதம் சிதம்பரத்தைக் குறிப்பிடுவ தாகச் சொல்லுகிறார்கள். சரித்திரத்திற்கும் எட்டாத காலத்திலேயே இக்கோயில் இருந்திருக்கிறது என்பர். ஆனால் இத்தகைய தொன்மைக்குச் சரித்திரத்தி லேயோ, இலக்கியத்திலேயோ ஆதாரம் கிடைக்க வில்லை. எனினும் நடராஜரின் கலைவடிவம் ஆறும் நூற்றாண்டுக்கு முற்பட்டதாகவே இருந்திருக்க வேண்டும் என்று ஊகஞ் செய்யலாம்

மன்று தொழுத மாமுனியான பதஞ்சலியுடன் ஒரு காலத்தவராக இருந்தவர் திருமூலர் என்ற செவிவழிச் செய்திக்குச் சரித்திரவழி ஆதாரம் ஒன்றும் இல்லை. திரு மூலர் தேவாரம் பாடிய அப்பருக்கும் சம்பந்தருக்கும் பிற்பட்டவர் என்றே கருதலாம்.

பல்லவர் காலத்தில் பிரசித்தமாக இருந்த கோயிலைச் சோழமன்னர்கள் தங்கள் குலதனமாகப் போற்றினர். தில்லைப் பெருமானை அப்பேரரசர்கள் குல தெய்வமாக வழிபட்டனர். 10-ம் நூற்றாண்டுக்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன்பே இக் கோயில் கட்டிடங் களைக் கட்டத் தொடங்கியிருக்கலாம் என்றும், பதினெ

ராம் நூற்ருண்டு வரை கட்டப் பெற்றிருக்கலாம் என்றும் ஊகிப்பது தவருகாது, தஞ்சை, இராமேச்சுவரம் கோவில்களை விடப் பழமையான சிற்ப வேலைப்பாடு உள்ளது சிதம்பரம்.

பெர்கூசன் என்ற கலைஞர், நிருத்தசபையில் பாண்டிய-நாயகர்களின் சிற்ப வேலைப்பாடுகளைத் 'தொன்மை மாட்சி' வாய்ந்ததாக மதிக்கிருர்.

வரலாற்றுத் தொடர்புகள்

பல்லவ சிம்ம வர்மன் II (கி. பி. 550-575) சிதம்பரத்துக்கு வந்து சிவகங்கைக் குளத்தில் நீராடித் தன் நோய் நீங்கப் பெற்ற காரணத்தால் ஹிரண்ய வர்மன் என அழைக்கப்பட்டான் என்பர். ஹிரண்ய வர்மன் என்ருல் பொன் வண்ணத்தான். புண் ஆன அவன் மேனி பொன்னுயிற்ரும். அவன் அதற்காகச் சபையை புதுப்பித்து அதைச் சுற்றிப் பல மண்டபங்களையும் கட்டிப் பிராகாரங்களையும் வகுத்தான் என்பர்.

ஏழாம் நூற்ருண்டு தான் அப்பர் சம்பந்தர் காலம். பல்லவ மகேந்திரவர்மனும் தெற்கே கூன்பாண்டியனை அரிகேசரியும் சமண சமய ஆதிக்கத்திலிருந்து தமிழ் நாட்டை மீட்டுக் கொண்டனர். அப்பர் சுவாமிகள் 'குனிந்த புருவமும்' என்று தொடங்கும் திருப்பாட்டை அருளி, 'என்று வந்தாய்?' என்ற குறிப்பையும் நடராஜ வடிவத்தில் கண்டு காட்டுவாராயினர்.

திருஞானசம்பந்தர் சிதம்பரத்தின் செல்வ நெடு மாடங்களைப் பாடியுள்ளார். அவை சேணோங்கி நின்று, அத்தல வாசிகளின் உன்னதக் குறிகோளைக் குறிப்

பிட்டன என்பதையும் குறிப்பாக வெளியிடுகிருர். இத்தல வாசிகளேச் ‘செல்வம் உயர்கின்ற செல்வர்’ என்கிருர். சிதம்பரத்தை செல்வர் வாழ்தில்லேச் சிற்றம் பலம் என்கிருர். நடராஜப் பெருமானே இவர் ‘சிற்றம் பலம் மேய செல்வன்’ என்றும், நடரா ஜவழிபாட்டைச் ‘செல்வன் கழல் ஏத்தும் செல்வம்’ என்றும் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

ஒரு மாளிகையிலோ, அரண்மனேயிலோ, விசால மில்லாத குறுகிய இதயத்தைப் பார்ப்பதைவிட, ஒரு குடிசையில் அல்லது சிறு வீட்டில் பெரிய உன்னத மான உள்ளத்தைப் பார்ப்பது மிகவும் அழகானது என்று ஒரு கிரேக்க அறிஞர் சொல்லுகிருர். திரு ஞான சம்பந்தப் பெருந்தகையோ, செல்வ நெடுமாடங் களில், விண்ணளாவிய மாளிகைகளில், விண் முட்டும் குறிக்கோளே உடைய அருட்பெருஞ்செல்வர்களேச் சுட்டிக் காட்டுகிருர்.

ஏழாம் நூற்ருண்டின் இறுதியிலும் எட்டாம் நூற் ருண்டின் முதலிலும் வாழ்ந்த சுந்தரர், திருவாரூரிலி ருந்தே தில்லே வாழ் அந்தணர்களே ‘அடியார்க்கும் அடியேன்’ என்று தொழுதார்.

தில்லேவாழ் அந்தணர்தம்
அடியார்க்கும் அடியேன்;
திருநீல கண்டத்துக்
குயவனுர்க்கு அடியேன்

என்று தம் சாதி கடந்த சமய நன்னிலேயைப் புலப் படுத்துகிருர். இது தான் தில்லேவாழ் அந்தணர்தம் கொள்கையும் ஆகும்.

இவர் (சுந்தரர்) தில்லையை அடைந்து ஆடும் ஆனந்த எல்லேயில் தனிப்பெருங்கூத்தின் வந்த பேரின்ப வெள்ளத்துள் திளேத்தார். 'மாறிலா மகிழ்ச்சி யில் மலர்ந்தார்'.

தேவாரம் பாடிய மூவர் காலத்தில் 'கோயில்' என்ற சிதம்பரம் நடராஜப் பெருமானுக்குரிய தனிப் பெருங்கருணையின் திருக்கோயிலாகத் திகழ்ந்து பெரு வாழ்வு பெற்றிருந்தது.

இக்கோயிலில் கோவிந்த ராஜப்பெருமாள் சந்நிதி யும் இடம் பெற்றது. இது பல்லவர் காலத்துச் சைவத் தின் சமரச நிலேக்குச் சாட்சி. பெருமாளேத் திருமங்கை யாழ்வாரும் குலசேகர ஆழ்வாரும் பாசுரம் இட்டுப் புகழ்ந்திருக்கிருர்கள். இந்த ஆழ்வார்களும் தில்லையை 'செம்பொன் மணி மாடங்கள் சூழ்ந்தது' என்று வருணித்திருக்கிருர்கள்.

இந்த ஆழ்வார்கள் காலத்தில் கோவிந்த ராஜ ரின் வழிபாடு தில்லே மூவாயிரவரான தீட்சிதர்களிடம் இருந்து வந்தது என்று சிலர் ஊகிக்கிருர்கள். ஆழ் வார்கள் வாக்கிலிருந்து இந்த ஊகத்திற்கும், சில நூற் ருண்டுகளுக்குப் பிறகே தனிப்பட்ட வழிபாடு கோவிந் தராஜருக்கு ஏற்பட்டிருக்க வேண்டும் என்பதற்கும் ஆதாரம் இல்லே என்றே கூறவேண்டும். கோவிந்த ராஜரையும் நடராசரைப் போல் தேவ தேவனுகவே தில்லேவாழ் அந்தணர்கள் மதித்தார்களோ என்று ஐயுறும்படி அமைந்திருக்கிறது திவ்யப் பிரபந்த வாக்கு.

ஒன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர் மாணிக்க வாசகர். இவர் தில்லைச் சிற்றம்பலத்தில் பௌத்த சமய வாதிகளைவென்று சைவத்தின் தனிப் பெருஞ்சிறப்பை நிலை நாட்டினுர். இவருக்கு முன்பே ஆதி சங்கரர் (கி. பி. 788-820)ல் இங்கே வந்து ஸ்படிக லிங்கமாகிய அழகிய சிற்றம்பலம் உடையாரைக் கொடுத்தாராம். சிதம்பர சக்கரம் ஒன்றையும் இங்கே ஸ்தாபித்தார், என்றும் சொல்லுகிறுர்கள்.

இத்தில்லைக் கோயில் உச்ச நிலையை அடைந்தது சோழப்பேரரசுகளின் காலத்திலேயே. அதாவது ஒன்பது முதல் பதின்மூன்றும் நூற்றுண்டுவரை. இக் காலப் பகுதியில் தான் இராமநுஜர் தோன்றி ஸ்ரீவைஷ்ணவ சமயத்தை நிலைநாட்டினுர். கம்பன் தோன்றிய காலப்பகுதி சோழப்பேரரசின் இறுதிக் கட்டத்திலே.

சோழன் விஜயாலயன் முதல் (கி.பி. 846-880) இறுதிச் சோழனை மூன்றும் இராஜேந்திரேன் வரை (கி.பி 1246-79), ஒவ்வொரு அரசரும் தில்லை நடராஜனுக்குத் திருப்பணிகள் செய்தனர். பொற்றகடு வேய்ந்தனர்; திருச்சுற்று மாளிகை எடுப்பித்தனர். சிதம்பரத்து வீதிகளைக் கற்கள் பரப்பி உறுதியும் அழகும் வாய்ந்தனவாகச் செப்பனிட்டனர். பலபல மண்டபங்களை அமைத்தும் பணி புரிந்தனர்.

முதல் பராந்தகன் என்ற சோழனைச் செப்பேடுகள் 'சிவனது பாத தாமரையில் உறையும் வண்டு' எனக் கூறுகின்றன. இவன் சிற்றம்பலத்தைப் பொன்

வேய்ந்ததாகச் செப்பேடுகளும், விக்கிரமசோழன் உலா திருவிசைப்பா முதலான நூல்களும் கூறுகின்றன.

இவனுக்குப் பின்வந்த ராஜராஜன் (கி. பி. 985-1013) தன் தலைநகராகிய தஞ்சாவூரில் பெரிய கோயிலைக் கட்டுவித்தான், தன் நிகரற்ற பக்திக்கும் சோழப் பேரரசின் பெருமைக்கும் ஒரு சான்ருக. இவனுக்குக் கூத்தப் பெருமானிடத்திலும் அளவு கடந்த பக்தி உண்டு. அதனுல் இவன் காலத்து நிலம் அளக்கும் கோலுக்குச் 'சிற்றம்பலக் கோல்' என்று பெயரிட்டான். கோயில் மரக்காலுக்கு ஆடல்வல்லான் என்று பெயர் கிடைத்தது.

ராஜராஜ சோழன் தன் திக்விஜயங்களாலும் பேரரசினுலும் தனக்குக் கிடைக்காத இதய அமைதியைப் பெரிய கோயிலைப் பெருவுடையாருக்குக் கட்டிப் பெற முயன்ருன். பிறகு தேவாரம்என்றஞானப் பெருங்கோயில் மறைந்து போயிருந்ததைக் கண்டு ஏங்கி, அதை மீண்டும் தமிழுலகத்திற்கு அளிக்க விரும்பினுன். தில்லையில் பொதிந்திருந்த தேவாரப் பாக்களைத் தெரிந்து எடுத்தான், நம்பியாண்டார் நம்பி உதவியால் அவற்றை ஏழு திருமுறைகளாக வகுத்தான். பெரிய கோயிலைக் காட்டிலும் இந்த ஞானப் பூங்கோயில் இதயத்தில் ஆழ்ந்த அமைதியை நிலை நாட்டியது எனலாம். இவனைத் திருமுறை கண்ட சோழன் என்பர்.

தேவாரத்தின் பாதுகாப்பு நிலையமாக உதவியது தில்லைத் திருச்சிற்றம்பலம். தில்லை மூவாயிரவர், இவனைச் 'சிவபாத சேகரன்' என்று கொண்டாடினர்.

இவன் திருமுறை கண்ட நிகழ்ச்சியைக் கூத்தப் பெருமான் ஆனந்தக் கூத்தாடியதற்கு அடுத்த படியாக வைத்துத் தில்லையும் சைவ உலகமும் கொண்டாடின.

இராஜ ராஜ சோழனின் மைந்தன் இராஜேந்திர சோழன் (கி. பி. 1012-1044). இவன் காலத்தில் சோழர் ஆதிக்கம் உச்ச நிலையை அடைந்துவிட்டது. இவனும் தில்லையில் திருப்பணிகள் செய்திருக்க வேண்டும். அவைகளைக் குறிக்கும் கல்வெட்டுகள் முதல் குலோத்துங்கனும் அவன் பின்னோரும் கோயிலைப் புதுப்பித்த போது மறைந்து போயிருக்க வேண்டும். சிலவே சிதைந்த நிலையில் காணப் படுகின்றன.

முதற் குலோத்துங்கனுடைய (கி. பி 1070-1120) வரலாறே தில்லைக் கோயிலின் வரலாறுதான் என்று சொல்லும்படி அவன் பணி செய்த வண்ணமாய் இருந் தான் தனது ஐம்பதாண்டு ஆட்சிக் காலத்திலே. இவன் காலம்தான் இராமநுஜர் காலமும். இவனுக்குப் பின் வந்தவர்களும் தில்லைக் கோயிலுக்கு எவ்வளவோ பணி புரிந்திருக்கின்றனர் இவன் மகன் விக்கிரம சோழன் பல திருப்பணிகளைத் தில்லையிலும் திருவதி கையிலும் செய்திருக்கிறான்.

விக்கிரம சோழன் மகனை இரண்டாம் குலோத் துங்கன் (கி, பி. 1133-1150) கிழக்கு ஏழு நிலைக் கோபு ரத்தை அமைத்தான். சிவகாமி அம்மனுக்குத் தனிக் கோயில் அமைத்தான், கோயிலின் பல பகுதிகளுக்குப் பொன் வேய்ந்தான். இவன் நடராஜ கைங்கரியத்திற்கு

இடையூருக இருப்பதாய்த் தான் கருதிய கோவிந்த ராஜப் பெருமாளை அப்புறப்படுத்தி விட்டான். இவன் தனக்குத் தில்லையில் முடிசூட்டு விழாவை வெகு விமரிசையாகக் கொண்டாடினுன்.

மூன்ரும் குலோத்துங்கன் (கம்பன் காலத்தவன்) காலத்திலும் தில்லைத் திருப்பணிகள் தொடர்ந்து நடைபெற்றன. தில்லைப் பணிகளில் மேம்பட்ட சோழப் பேரரசர்களில் இவனே கடைசியானவன். இவனது சிறந்த பணி, திருத்தொண்டர் புராணம் என்ற பெரிய புராணத்தைத் தனது மந்திரியான குன்றத்தூர்ச் சேக்கிழாரால் செய்வித்தது இப்புராணம் தில்லை ஆயிரக்கால் மண்டபத்தில் நாள்தோறும் சேக்கிழாராலேயே காலட்சேபம் செய்யப்பட்டது. அதை அரசன் கேட்டுஇன்புற்று சேக்கிழாருக்குத் 'தொண்டர் சீர்பரவுவார்' என்ற பட்டத்தையும் சூட்டினுன். அவரை யானை மீது ஏற்றி அவருக்குத் தானே கவரி வீசி வந்த பெரும் பணிவும் இவ்வரசனுக்கு உரியதாகும்.

பாண்டியர்களும் தில்லைத் திருக்கோயிற் பணிகளில் பங்கு கொண்டனர். இவர்களில் தலைசிறந்தவன், ஜடாவர்மன சுந்தர பாண்டியன், (கி. பி 1251-1272) இவன் தன் வெற்றிகள் காரணமாக, திருச்சிற்றம்பலவனை வணங்கித் துலாபார தானம் வழங்கினுன். சிதம்பரம் கோயிலில் உள்ள முப்பது கல்வெட்டுக்கள் இப்பாண்டியனைப் பற்றியவை ஆகும். தில்லையில் மேற்கு ராஜ கோபுரத்தை அமைத்தவன் இவனே. இதற்குச் சுந்தர பாண்டியன் கோபுரம் என்று பெயர்.

விஜயநகர அரசர்கள் கி. பி. 1428- முதல் இக் கோயிலுக்குப் பணி செய்துள்ளனர். கிருஷ்ண தேவ ராயர் இந்த அரசர்களில் மிகச் சிறந்தவர். இவர் தில்லைச் சிற்றம்பலவனைத் தரிசித்து வடக்கு இராஜ கோபுரத்தை கட்டினர். இவர் வழியில் வந்த தஞ்சை அச்சுதப்ப நாயக்கன் கி பி 1566ல் தில்லைத்திரு மூலனட்டானேசுவரர் கோயிலுக்கு நிலதானமாக ஒரு கிராமத்தை வழங்கினன். மதுரை வீரப்ப நாயகன் (கி. பி. 1572-1595) தில்லைக் கோயிலின் வெளிச் சுற்று மதிலை எடுப்பித்தான். அதற்கு வீரப்ப நாயக்கன் மதில் என்று பெயர்.

சேர அரசர்களும் இக்கோயிலுக்குப் பணி செய்தனர் என்பதற்கு, சேரமான் பெருமாள் நாயனர் வழி வந்த கொச்சி ராஜாவான ராமவர்மா தம் நாட்டில் ஐந்து கிராமங்களையும், சிதம்பரம் கோயிலுக்கு முன்னரே விடப்பட்டிருந்த நிலங்களையும் இறையிலியாக்கிக் கொடுத்தது சான்ருகும். இச்செய்தி இராம வர்மாவின் கல்வெட்டிலிருந்து தெரிய வருகிறது.

தில்லைத் திருப்பணிகளின் பரம்பரை எவ்வளவு நீண்டு தொடர்ச்சியாக வந்திருக்கிறது பாருங்கள்! இப்பணிகள் 18-ம் நூற்ருண்டிலும் 19-ம் நூற்ருண்டிலும், 20-ம் நூற்ருண்டிலும் தொடர்ந்து வந்திருக்கின்றன. ஆயிரக்கால் மண்டபத்தில் கி. பி. 1773 ம் ஆண்டு கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது. கலியாண்டு 4874 சக 1695 என்று அக்காலம் குறிக்கப் பெற்றிருக்கிறது. சக ஆண்டில் 78 ஐ கூட்டினல் கி. பி. ஆண்டு கிடைக்கும்.

இது ஒரு விசித்திரமான கல்வெட்டு. இதிலிருந்து தில்லை நடராஜப் பெருமான் திருவாரூருக்குக் கொண்டு போகப்பட்டுத் தில்லைக்கு மீண்ட நிகழ்ச்சி தெரிய வருகிறது. ஏன் இந்த யாத்திரை தில்லைச்சிற்றம் பலவனுக்கு.

ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் நடந்த போர்களை இந்திய வரலாறு அறிவிக்கிறது. அப்போர் களில் பலதடவை இங்கிலீஷ்காரரும் பிரெஞ்சுக்கார ரும் முகமதியரும் தில்லைக் கோயிலைத் தம் அரண் ஆக்கிக் கொண்டனர். (சோழர் முதலானவர்கள் பக்தி யினால் அரணாக்கிக் கொண்டது போல் அல்ல) பக்தர் களான அரசர்கள் பெருமானின் வழிபாடுகளை வளர்த் தும் உறுதிப் படுத்தியும், முறைப் படுத்தியும் தமக்கு அரண் செய்து கொண்டார்கள். புறச் சமயிகளான ஆங்கிலேயர் முதலானவர்களோ தாங்கள் கோயிலை வசப்படுத்திக் கொண்டிருந்த போர்வெறிக் காலங் களில் பெருமானுக்கு வழிபாடே இல்லாமல் செய்து விட்டனர்.

கூத்தப் பெருமான் தில்லையிலிருந்து தஞ்சை அரசரின் உதவியால் திருவாரூருக்குக் கொண்டு போகப் பட்டார் பாதுகாப்புக்காகவும் வழிபாட்டுக் காகவும். இவர் மறுபடியும் தில்லைக்கு எழுந்தருளினர் என்பது கல்வெட்டுச் செய்தி.

மற்றொரு சமயம் தீட்சிதர்களே கூத்தபெருமானைப் புளியங்குடி என்னும் ஊரில் ஒரு புளிய மரத்தடியில் பல ஆண்டுகள் மறைத்து வைக்கும்படி நேர்ந்து

விட்டதாம். பின்னர் இப்பெருமான் தில்லைக்கு எழுந்தருளினர் என்பதைச் சோழ மண்டல சதகச் செய்யுள் ஒன்று தெரிவிக்கிறது.

அன்னியரால் சிதைவு பெற்ற இக்கோயிலில் பச்சையப்ப முதலியார், திருப்பணிகளைத் தொடர்ந்து செய்தார். இப்பணிகளை மழவை மகாலிங்கையரும் காஞ்சி மகாவித்துவான் உமாபதி முதலியாரும் தங்கள் பாடல்களில் பாராட்டியுள்ளனர். பச்சையப்பர் திரு உருவமும், இவருடன் அரும்பணிகள் செய்த தமக்கை சுப்பம்மாளின் திரு உருவமும் இன்றும் தெற்குக் கோபுர வாசலில் காணப்படுகின்றன.

இந்த வழிவழிப் பணிகளில் ஈடுபட்ட வணிக மன்னர், அண்மையில் வாழ்ந்த ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார். இவரே அண்ணாமலைப் பல்கலைக்கழகம் நிறுவியவர். இவருக்கு இத்துறையில் வழிகாட்டியவர்கள் இவருடைய தமையனர் சிதம்பரம் செட்டியாரும், திவான் பகதூர் இராமசாமிச் செட்டியாரும் அவர், களுடைய முன்னோர்களும் ஆவர். பழுதுபட்ட இராஜ கோபுரங்களை அண்மையில் புதுப்பித்தவர்கள் இவர்களே. கனக சபையைப் பொன் முலாம் பூசிப் புதுப்பித்ததும் இவர்களது திருப்பணிதான். தில்லைப் பெருமானுக்குப் பல நிபந்தங்களால் கட்டளைகளும் நந்தா விளக்கு, வாகனங்கள் முதலியனவும் இவர்களால் செய்யப்பட்டன.

1891-ம் ஆண்டில் கும்பாபிஷேகமும் செய்யப் பட்டது. மூன்று தலைமுறையாக இப்பெருங்குடும்பம் செய்து வந்த பணிகளுக்கெல்லாம் ஒரு நினைவுக் குறி

யாக, ராஜாசர் அண்ணுமலையாரின் தந்தையும் தாயும் கூத்தப் பெருமானின் சந்நிதியில் நந்தா விளக்கை ஏந்தி நிற்பதைக் காண்கிறோம். இது, தங்கள் அருமை மைந்தரான செட்டிநாட்டரசர் அண்ணுமலைப் பல்கலை கழகம் என்னும் அறிவுப் பெருந்தீபத்தை ஏற்றி வைத்தார் என்பதற்கும் ஒரு நினைவுச் சின்னம்தான்.

கோயில் அமைப்பும், தல அமைப்பும்.

சிதம்பரத் தலமானது கிழக்கே திருவேட்களத்தையும், தெற்கே கொள்ளிடப் பேராற்றையும், மேற்கே நாகசேரி குளத்தையும், வடக்கு வெள்ளாற்றையும் தனக்கு எல்லையாகக் கொண்டுள்ளது. இன்றைய சிதம்பரம், பல புறவீதிகளுடன் வளர்ந்திருக்கிறது. இவற்றின் நடுவே ஒழுங்கான நான்கு வீதிகளை உடைய தலம்தான் பழைய சிதம்பரம் என்று ஊகிக்கலாம்.

சிதம்பரம் தொன்று தொட்டுக் கலாநிலையமாகவும் கல்விநிலையமாகவும், கல்வியே அரணுகக் கொண்— ஞானப் பெருநிலையமாகவும் வளர்ந்து வந்திருக்கிறது. இன்று தொடக்கநிலைப்பள்ளி முதல் உயர்தரக்கல்லூரி வரை பல நிலையங்களும் அறிவைப் பெருக்கிக் கொள்ள உதவுகின்றன, சிறப்பாக ஆறுமுக நாவலரின் தொண்டுகளுக்கு நினைவுக்குறியாக ஆறுமுக நாவலர் தமிழ்க் கல்லூரியைக் குறிப்பிடலாம். சமய வளர்ச்சிக்கு அறிகுறியாக, சைவப்பிரகாச வித்தியாசாலையைக் குறிப்பிடலாம். இவை, இருள் அகற்றும் அறிவுக் கைவிளக்குகள்.

சிதம்பரம் என்றதுமே அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தின் நினைவுதான் இன்று நமக்கு நினைவிற்கு வருகிறது. இதைச் சிறப்பாகத் தமிழ்ப் பல்கலைகழகம் என்பர். இங்கே தமிழ் குறுகியதோர் எல்லைச் சுவருக்குள் இருந்து விடாமல், வடமொழி ஆங்கிலம், இசை, கைத்தொழில், விஞ்ஞானம் முதலியவற்ருேடு தோழமை பூண்டு வளர்ந்துவர வசதி பெற்றிருக்கிறது. பகுத்தறிவோடும், தொன்று தொட்டு வந்த மெய்யுணர்வும் கைகோத்துக் குலாவித் தமிழை வளர்க்க இடம் இருக்கிறது.

இனித் திருக்கோயிலின் அமைப்பை நோக்குவோம். அதற்கு முன் இன்றைய சிதம்பரத்திலுள்ள கோயில்களை ஒரே பார்வையாகப் பார்த்து வருவோம். வேடன்பிள்ளையார் கோயில், செங்கழுநீர்ப் பிள்ளையார் கோயில், தேரடிப் பிள்ளையார் கோயில், நரமுகப் பிள்ளையார், கூத்தாடும் பிள்ளையார் கோவில்கள் என்பன பிள்ளையாரின் சர்வ வியாபகத்திற்கு அறிகுறி. இவர் தமிழகத்தில் முருகனுக்குப் பின் தோன்றினர் எனினும், புராண மனேபாவத்தில் முருகனுக்கும் முன் தோன்றிவிட்டார்! சங்க காலத்தில் சிவகுமாரன் ஒருவனே. அதாவது, முருகவேள் ஒருவனே. அக் காலத்தில் பிள்ளையார் என்ருல் முருகனைத்தான் குறிக்கும். இன்ருே பிள்ளையார், மூத்த பிள்ளையார், வாதாபியியிலிருந்து வந்த கணபதியைக் குறிப்பிடுவது. தமிழர் விசாலமான விருந்தோம்பும் இதயப்பண்பைச் சுட்டிக் காட்டுகிறது.

சேக்கிழார் கோவில், பெரிய புராணம் என்ற திருத்தொண்டப் புராணத்துக்கு இத்தலத்தோடு

உள்ளதொடர்பை நினைவூட்டுகிறது. மாரியம்மாள் செல்லியம்மன் காளியம்மன் கோயில்கள், காளியை வழிபடும் சமயத்தை நடராஜ் வழிபாடு வென்று வலி யழித்ததை நினைவூட்டுகிறது.

'தில்லைக்காளி எல்லைகப்பால்' என்ற ஒரு வாக்கு தமிழர்களிடையே வழங்கிவருகிறது. ஓர் அசுரனை அழிக்கப் புறப்பட்ட காளி, அவனை அழித்த பின்பும் தாகு கோபம் தணியாமல் உலகத்தையே அழிக்க ஆரம் பித்து விட்டாளாம். தர்மாவேசம் அசுர ஆவேசத்தை ஒடுக்கிய பின்பும் கோபாவேசமாகத் தொடர்ந்து பொங் கியதாம். அப்போழுது நடராஜப் பெருமான் ஊர்த்துவ தாண்டவம் செய்தருளிக் காளியின் ஆவேசத்தை அடக்கி விட்டாராம். அப்பால் 'தில்லையின் வட எல்லை யில் அமர்க!' என்று ஆணையிட்டாராம். இப்புராணர் கதையின் உட் பொருளும் கற்பனை வளமும் பின்னர் ஆராயப்படும்.

நந்தனர் கோயில் இத்தலத்தின் தென்மேற்கில் இருக்கிறது. இது, நடராஜப் பெருமானின் அருள் நந்தனரை எப்படி ஆட்கொண்டது என்பதை நினை வூட்டுகிறது. ஞானத்தீயில் குளித்து ஒவ்வொரு பக்த னும் தூய்மையை அடைகிருன், அமர நிலையை எய்து கிருன் என்பதற்கு நினைவுக்குறியாக நந்தனர் கதை வளர்ந்திருக்கிறது.

இத்தகைய கோயில்களுக்கிடையே நடராஜப் பெருமானின் திருக்கோயிலை உற்று நோக்குவோம். இது ஏறத்தாழ 40 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்

துள்ளது. இது பதின்மூன்று நூற்றுண்டுகளாகப் பல்வேறு அரசர்களால் உருவாக்கப் பெற்றது. சிற்றம்பலமும் பேரம்பலமும் இதன் ஆதி அமைப்பு. இவை மரத்தால் கட்டப் பட்டுள்ளன. இது இக்கோயிலின் பழமைக்குச் சான்று. பல்லவர் காலத்துக் குகைக் கோயிலுக்கும் கற்கோயிலுக்கும் முற்பட்டது இக் கோயில் என்பதற்குச் சிற்றம்பலமும் பேரம்பலமும் சான்றுகள்.

இக்கோயிலுள் ஐந்து சபைகள் சித்சபை, கனக சபை, தேவசபை, நிருத்தசபை, இராஜ சபை என்பன, சித்சபையே சிற்றம்பலம். சிற்றம்பலத்தின் எதிரம்பலமே கனகசபை. பேரம்பலமே தேவசபை, தேர் அம்பலமே நிருத்த சபை. குதிரைகள் பூட்டிய தேர் அமைப்பைப் பெற்றது இம்மண்டபம். ஐந்தாவது சபையாகிய இராஜசபை ஆயிரக்கால் மண்டபம்.

இவ்வைந்து சபைகளுக்கும் அதிபர் சபாநாயகரான நடராஜர். இவரைச் சபாபதி என்றும், சபாநாதர் என்றும் சபேசன் என்றும் கூறுவர். இவர் மார்கழியிலும் ஆனியிலும் இருமுறை இராஜ சபையில் எழுந்தருளித் திருமஞ்சனம் கொண்டு பக்தர்களுக்குத் தரிசனம் அளிக்கிருர். ஆருத்திரா தரிசனம மார்கழியில் நடைபெறும் பெருவிழா.

நடராஜப்பெருமான் திருமுன்னர், கொடி மரத்தின் தென்பால் உள்ள நிருத்தசபை ஐம்பத்தாறு தூண்களை உடையது. ஒவ்வொரு தூணும் மிக்க ஓவிய வேலைப்பாடு அமைந்தது. இதில் ஊர்த்வ தாண்டவ மூர்த்தியாகக் காட்சி வழங்குகிருர் நடராஜா.

சித்சபை என்ற சிற்றம்பலத்தில் கூத்தப் பெருமானும், இடது பாகத்தில் சிவகாம சுந்தரியும் காணப் படுகின்றனர். வலப்புறத்திலே சிதம்பர இரகசியம், இங்கே ஆகாசலிங்கம் மந்திரரூபமாகத் திருவம்பலச் சக்கரத்துடன் அமைக்கப் பட்டுள்ளது. இறைவன் சகளம் நிஷ்களம் சகளநிஷ்களம் என்னும் மூவகைத் தோற்றத்துடன் எழுந்தருளியிருக்கிறுன் என்றும், நடராஜார் திருமேனி சகளம் என்றும், இரகசியம் நிஷ்களம் என்றும், ஸ்படிகலிங்கம் சகள நிஷ்களம் என்றும் கூறுவர்.

சிற்றம்பலத்தில் நடம்புரியும் எம்பெருமான் கல்லார்க்கும் கற்றவர்க்கும் ஒருங்கே அருள் புரிகின்றுன்.

எத்துணையும் பேதமுருது
எவ்வுயிரும் தம்உயிர்போல்
எண்ணி, உள்ளம்
ஒத்துஉரிமை, உடையவராய்
உவக்கின்ருர் யாவர், அவர்
உளந்தான் சுத்த
சித்துருவாம் எம்பெருமான்
நடம்புரியும் இடம்என நான்
தெளிந்தேன்

என்கிருர் இராமலிங்க அடிகள்.

கல்வியோ, சாதியோ, செல்வமோ, பதவியோ, புகழோ, நடராஜ பக்திக்கு, அவசியம் இல்லை இடையூருகவும் இருக்கலாம். உண்மையான சமதர்ம

நிலையில் நிலை பெற்ற உள்ளம் தான் சிற்றம் பலம், நடராஜா நடம் செய்யும் உண்மைத் தலம் என்னும் இராமலிங்கரின் கருத்தை ஓர் உயிர்நிலைக் கொள்கையாக மதிக்கலாம்.

தாயுமான அடிகள், 'எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே' என்று அருளிச்செய்வர். இராமலிங்க அடிகளோ,

> எல்லாரும் இன்புற்றிருக்க
> நடம் ஆடுகின்றாய்,
> வல்லாரின் வல்லாய்!
> மலர்ப்பாதம் நோவாதா?

என்று தமது நடராஜ சித்தாந்தத்தை வெளியிடுகிறார்.

பதஞ்சலி, வியாக்கிர பாதர் தொடக்கமாக, தாயுமானவர் இராமலிங்க அடிகள் ஈறாக எத்தனை மெய்ஞ் ஞானிகள் சிற்றம்பலம் கண்டு பெறற்கு அரும்பேறு பெற்றிருக்கிறார்கள்! சிற்றம்பலவன் எந்நாட்டவர்க்கும் உரியவன் ஆயினும். தென்னாட்டவர்க்கே சிறப்பாக உரியவன் என்று மாணிக்க வாசகர் போன்ற மகான்களும் கருதுகின்றனர். தமிழகத்திலே கோச்செங்கட் சோழன், நந்தனார், கூற்றுவ நாயனார், திருமூலர், சமயாசாரியரான சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்க வாசகர், சேரமான் பெருமாள் நாயனார், உமாபதிசிவம், முதலானவர்களும் அருணகிரியார், அப்பையதீட்சிதர் முதலானோர்களும் 'எது சிற்றம்பலம்?' என்று கண்டு தொழுதிருக்கிறார்கள்.

மெய்ஞ்ஞானிகளைப் போல் இன்றைய விஞ்ஞான மனப்பான்மை படைத்தவர்களும் நடராஜாவின் கலை வடிவத்திலே சொக்கிப் போயிருக்கின்றனர். நடராஜா வின் ஆடல் அசைவு அண்டகோடிகளில் காணப்படுவதுபோல் அணுக்களிலும் காணப்படுகிறது என்பதை உணர்ந்தவர்கள், மாணிவாசகப் பெருமானின் அருள் வாசகத்திற்கு இணங்க,

வானாகி மண்ணாகி
வளியாகி ஒளியாகி,
ஊனாகி உயிராகி,
உண்மையுமாய் இன்மையுமாய்,
கோனாகி, 'யான்எனது' என்று
அவரவரைக் கூத்தாட்டு
வானாகிநின்றாயை
என்சொல்லி வாழ்த்துவனே?

என்று சிற்றம்பலவனை வாழ்த்துவது அல்லால் வேறு என்செய்ய வல்லார்?



4. சிற்றம்பலவனின் பரமநாடகம்

தில்லைச் சிற்றம்பலவனைப் பற்றிய தமிழ் நூல்கள் பலப் பல. திருமூலரின் திருமந்திரத்தில் திருக்கூத்தும் தரிசனமும் திருஅம்பல சக்கரமும் கூறப் படுகின்றன. திருமூலர் திருவாவடு துறையில் சிதம்பரம் கண்டவர். 'எங்கும் திருமேனி' என்றும், 'எங்கும் சிதம்பரம்' என்றும் கூறுகிறவர், யோகக் காட்சியால் அச்சிதம்பரத்தைத் திருவாவடுதுறையிலும் கண்டார். அங்கே யோகத்திலிருந்தபடியே தாம் ஒரு சமயம் நேரில் கண்ட சிதம்பரத்தையும் அதன் தத்துவப் பொருளையும் நினைத்துப் பார்த்தார், தியானம் செய்தார், தரிசனம் செய்தார்.

பொற்பதி என்றும், அற்புதக் கூத்து என்றும், ஆனந்த நாடகம் என்றும், உலகம் உய்ய எடுத்தருளிய சேவடி என்றும் தாம் கருதிய சிற்றம்பலத்தையும் துதித்தார். சில தினங்களே சிதம்பரத்தில் தங்கியிருந்தவர் அங்கேயே நித்திய வாசம் செய்வது போன்ற உணர்ச்சியைத் திருவாவடு துறையில் பெற்று விட்டார். இவர் உள்ளத்தில் சிதம்பரம் எப்போதும் தங்கி விட்டது என்பதை நன்கு உணர்ந்தார்.

உடம்பு சிதம்பரத்தை விட்டுத் திருவாவடு துறைக்கு வந்து விட்டது; ஆனால் சிதம்பரம் தம்மைத் தொடர்ந்து வந்து விட்டதாகவே கருதினர் இச்சிவ

யோகியார். 'தில்லைவெளியிலே கலந்துவிட்டால் அவர் திரும்பியும் வருவாரோ?' நந்தனர் திரும்பி வரவில்லை என்ருல், தில்லைவெளி வந்து விட்டது திருமூலர் உள்ளத்திலே 'அண்டங்கள் ஒரேழும் அம்பொற் பதியாயின.

அண்டம் நடம்செயும்
ஆலயம் தானே

என்று பாடுகிருர்.

அந்தச் சிதம்பரத்தை, அந்த நடனத்தைத் திருமூலர் எவ்வளவு தெளிவாகக் கண்டார் தெரியுமா?

ஆடிய காலும்
அதில் சிலம்போசையும்
பாடிய பாட்டும்
பலவான நட்டமும்

கண்டு கொண்டேன் என்கிருர்.

எங்கே கண்டார் தெரிய வேண்டாமா? இருந்த இடத்தில் இருந்து கொண்டே கண்டாராம். இருதய கமலம் என்று புராணம் சொல்லுகிறதே, 'அந்த அகச் சிற்றம்பலத்திலே. நம் தமிழகத்தின் மிகப் பழம்பதிகளில் ஒன்ருகிய தில்லைமூதூர் புறச்சிற்றம்பலம் தானே.

இறைவன் உள்ளும் புறமும் ஆடுகிருன். அண்டத்தில் ஆடுவதுபோல் பிண்டத்திலும் ஆடுகிருன். அதாவது உடம்பிலும்.

ஒவ்வாத மன்றுள்
உமைகாண ஆடிடும்
செவ்வானில் செய்ய
செழுஞ்சுடர் மாணிக்கம்

என்று பாடுகிறார், நிஷ்டை கலந்தும் கலையாத நிலையிலே.

யாவையும் ஆடிடும்
எம்இறை ஆடவே

என்ற உண்மையும் தெளிவாகி விட்டது.

இந்த நிலையில்தான் 'இருந்தேன் இக்காயத்தில் எண்ணிலிகோடி!' என்கிறார்.

ஒப்பிலி கோடி
யுகம்இருந் தேனே!

என்று பாடுகிறார். இப்படித் தெளிவாகச் சொல்லி யிருக்கும் அகச் சான்றையும் மறந்து விட்டது போல் திருமூலர் மூவாயிரம் ஆண்டுகள் யோகம் பயின்றார் திருவாவடுதுறையிலே என்கிறார்கள். யோகிக்குக் கால வரையறை ஏது?

சிற்றம்பலவனின் பரம நாடகம் கண்டவர்களில் திருமூலர் ஒருவர். தேவாரம் பாடிய மூவர்களும் கண்டனர் இப்பரம நாடகத்தை என்பதற்கு அவர்கள் பாடிய பாடல்கள் சாட்சி சேரமான் பெருமாள் நாயனாரும், பட்டினத்தாரும் பின்னும் கருவூர்த் தேவர், கல்லாடர், நம்பியாண்டார் நம்பி, முதலியவர்களும் அம்பலவாணனின் அடியிணை தொழுது இந்த நாடகத்தையும் இதன் உட்பொருளையும் கண்டிருக்கிறார்கள்.

இத்தகைய அநுபூதிமான்களில் ஒருவர் சேக்கிழார். இவர் இயற்றிய திருத் தொண்டர் புராணத்திலேயே, அத்தொண்டர்கள் அனுபவித்த சிற்றம்பலவனின் பரம நாடகத்தை இவரும் அனுபவித்திருக்கிறார் என்பதற்குச் சான்று கிடைக்கிறது. உமாபதி சிவாசாரியார் (1290-1340) 'கோயில் புராணம்' என்ற நூலை இயற்றியிருக்கிறார். (கோயில் என்றால் சிதம்பரம் தானே) திருத் தொண்டர் புராண சாரம் இயற்றிச் சேக்கிழார் புராணம் முதலிய நூல்களும் செய்திருக்கிறார். இவரும் நடராஜ அநுபூதி உடையவர் தாம்.

தில்லைக் கலம்பகம் இயற்றிய இரட்டையரும் நடராஜ பக்தரே. அருணகிரிநாதர் பிரசித்தமான முருக பக்தர் என்பதை அனைவரும் அறிவர். இவர் தம் திருப்புகழிலும் சிதம்பரத்தைச் சிறப்பித்திருக்கிறார். குரு ஞான சம்பந்தர், வெள்ளியம்பல வாணர், முத்துத் தாண்டவர் முதலியவர்கள் பாடல்களாலும் கீர்த்தனங்களாலும் தங்கள் நடராஜ பக்தி அனுபவங்களை வெளியிட்டிருக்கிறார்கள்.

முத்துத் தாண்டவர் கண்ட பரம நாடகம்

தெருவில் வாரானோ—என்னைச் சற்றே
திரும்பிப் பாரானோ?

என்ற பாமரரஞ்சகமான-தமிழ்நாடெங்கும் ஒரு காலத்தில் பிரமாதப் பட்ட-பதம் ஒன்று முத்துத் தாண்டவரால் இயற்றப் பட்டது.

'வாசல்முன் நில்லானோ?' என்றும், 'எனக்கு ஒரு வாசகம் சொல்லானோ?' என்றும் இக்கீர்த்தனத்தின் சரணத்தில் வருவதும், 'நேசமாய்ப் புல்லேனோ?' என்று துணிந்து காதல்-துறையில் அனுபவம் வெளிப் படுவதும், திடீரென்று,

தேசிகன் அம்பலவாணன்
நடம்புரி தேவாதிதேவன்
சிதம்பரநாதன்

என்று முடிவு பெறுவதும் முத்துத் தாண்டவரின் அனுபவ முத்துக்களை வாரிச் சிதறுவதுபோல் அமைந் திருக்கின்றன அல்லவா?

கடைசியாகப் பல்லவியில் 'தெருவில் வாரானோ? என்னைச் சற்றே திரும்பிப் பாரானோ?' என்று திருப்பு வது, அதிசயமாக ஆழ்ந்த அனுபவங்களை, ஆழ்கடல் முத்துக்களை வாரித் தெருவில் இறைப்பதுபோல் எவ்வளவு பாமர ரஞ்சகமாகி விடுகிறது!

முத்துத் தாண்டவர் கண்ட ஆனந்த தாண்டவம் வேறொரு கீர்த்தனத்திலும் அற்புதமாகக் காண்கிறது:

பல்லவி

அருமருந்தொரு திருமருந்து
அம்பலத்தே கண்டேனே! (அரு)

அனுபல்லவி

திருமருந்துடன் வருமருந்து
தில்லை அம்பலத் தாடுமருந்து
இருவினைகள் அறுக்கு மருந்து
ஏழையடியார்க்குக் கிரங்குமருந்து! (அரு)

சரணம்

திரித்தித் தித்தியென் ருடுமருந்து
தேவாதி மூவர்கள் காணுமருந்து
கருத்தைத் திருத்தி யிருத்துமருந்து
காலனைக் காலால் உதைத்த மருந்து (அரு)

இவ்வாக்கிலே நாத உடலில் கவிதை உயிரைக் காண்கிறோம். இசைக் கடலில் கவிதைமுத்தை அள்ளிக் கொள்கிறோம். கவிதைமின்னல் இதய இசை வானில் மின்னுகிறது.

குமரகுருபரர் கண்ட பரம நாடகம்

குமர குருபர சுவாமிகள், திருமலை நாயக்கர் காலத்தில் இருந்தவர். 'சிவகாமி அம்மை இரட்டை மணி மாலை' என்ற நூலையும், சிதம்பர மும்மணிக் கோவை என்ற நூலையும் இயற்றியதுடன், சிதம்பரச் செய்யுட் கோவை என்ற அருமையான பொருள் பொதிந்த நூலையும் இயற்றித் தந்தவர். 'செம்பொன் மன்றில் ஒருதாள் ஊன்றி' நடராஜப் பெருமான் ஆடுகிறாராம். விசையாக, வெகு விசையாக. அதனால் 'நிகரும் அற்புதங்கள் கேளீரோ, காணீரோ?' என்று அழைக்கிருள் சகலகலாவல்லி குமர குருபரர் நாவிலிருந்து.

அண்டமாடக் குலைந்து
அகிலமாடக் கருங்
கொண்டல்போலும் குழல்
கோதையோடும் கறைக்
கண்டன் ஆடும் திறல்
காண்மினோ? காண்மினோ!

ஆனந்தக் கூத்தில் ஊழிக் கூத்து இது! சங்காரம் புரட்சிகரமாக விடுவிக்கத்தானே, புதுப்பிக்கத்தானே! ஆகவே அஞ்சாதீர் அஞ்சாதீர் என்று அபயம் தருகிறது ஆனந்தக் கூத்து. ஏன், நான் கால காலன் என்கிறார் ஆனந்தக் கூத்தர்.

இந்தப் பரம நாடகத்தைக் குமர குருபரர் மட்டுமா வியந்து காண்கிறார்? இறைவர் பங்கில் உறையும் சிவ காம சுந்தரியும் வியந்து வியந்து பார்க்கிறாளாம்.

மதுவிரிகோதை மடவரற்கு, அம்ம!
புதுவிருந்து உண்ண உண்ண
அதிசயம் விளக்குமின்நின்
அற்புதக் கூத்தே!

உமையம்மை காணும் அதிசயத்தை, அற்புதத்தை நம்மையும் காணச் செய்கிறது குமர குருபரர் கவிதை —புதுமையாக, என்றும் புதுமையாக—பொதுமையாகவும் தான். உமையம்மை இயற்கையின் அறிகுறி. புதுமதுப் பொங்கும் பச்சை; வளத்தின், வனப்பின், இயற்கை நிறமல்லவா? இந்தப் பச்சையும் கருநீலமும் உமையம்மையின் திருநிறம். இயற்கை அன்னை காணக்காண காதலனாகிய பரமன் தாண்டவம் ஆடுகிறான். அழகு அழகான தாண்டவங்கள். கோர தாண்டவங்களும் அழிவுக் கூத்தும் அழகுக் கூத்துத் தான்!.

எல்லாம் புதுமை, எங்கும் புதுமை, என்றும் புதுமை. பார்த்து அனுபவிக்கத்தான் கண்ணாயிரம் வேண்டும், அகக் கண்ணாகிய சுத்த அறிவும், அருளும்

வேண்டும். பார்க்கும் தோறும் 'இன்று நாம் புதி தாய்ப் பிறந்தோம்!' என்று பார்க்க வேண்டும்.

குமர குருபரர் சிதம்பர விலாசம் என்ற ஒருசிறு பிரபந்தமும் இயற்றியிருக்கிறார், ஆசிரியப்பாவில், 145 அடிகளில். இதில்,

பரம நாடகம்
ஆடிய பொதுவில்

என்ற வாக்கியம் வருகிறது. இத்தகைய பரம நாடகம் நடைபெறுகிற,

தில்லைமா நகர்
எல்லை காண்கினும்,

அந்த 'ஆடிய பாதநிழலி'ல் வாழ்வது நிச்சயம்தானே என்று முடிகிறது சிதம்பர விலாசம்.

கவிஞர் குமர குருபரர், இந்தப் பரம நாடகம் காண்பதற்கு முன் சாதாரணக் கவிஞராகத் தான் இருந்தார். செந்திலாண்டவனைத் தரிசிக்குமுன் ஊமைப் பிள்ளையாய் இருந்தாராம். முருகன் அருள், பாட்டால் பேசுவித்தது என்றால், 'பரம நாடகம்' இவரைப் பாடுவித்தது அற்புதப் பாடல்களால் என்று சொல்லவேண்டும். 'பாடுவித்தால் ஆரொருவர் பாடாதாரே?'

இத்தகைய பாடல் ஒன்றால் இவர் படைப்பின் அரிய இரகசியம் ஒன்றைத் திரைவிலக்கிக் காட்டுகிறார்.

வைத்த பகிரண்டமெனும்
மணற்சிற்றில் இழைத்து இழைத்து, ஓர்
பித்தனுடன் விளையாடும்
பெய்வளையைப் பாடுவனே !

விண்வெளியிலே அடுக்கடுக்காய், அழகழகாய் மாடத்தின்மேல் மாடமாய் அண்டங்கள் பகிரண்டங்கள் அடுக்கி வைக்கப்பெற்றிருக்கின்றனவாம். இவை யெல்லாம் எப்படி வந்தன? எப்படி இசைந்து பொருந்தி இருக்கின்றன? இதன் பரம இரகசியம் யாது? இவை— இந்த அண்டபகிரண்டங்களெல்லாம்-மணல் வீடுகள்! ஒரு சிறுமி விண்வெளி என்ற விரிகடற்கரையிலே கட்டி விளையாடிய மணல் வீடுகளே என்கிறார் குமர குருபர அடிகள்.

இந்தச் சிறுமி ஒரு சிறுவனுடன் விளையாடுகிறாளாம். அந்த முடிவில்லாத விண்வெளிக் கடற்கரையிலே, அந்தச் சிறுவன் பித்துப் பிடித்தவன்போல், சிறுமி எவ்வளவோ ஜாக்கிரதையாக, அழகையே இழைத்து இழைத்துச் செய்வதுபோல் செய்த மணற் சிற்றில்களையெல்லாம், ஓடியும் ஆடியும் சிதைத்து விடுகிறானும், அழித்துவிடுகிறானும். அது அவனுக்கு விளையாட்டு—காதல் விளையாட்டு.

சிறுமியோ சிறிதும் கோபம் கொள்ளவில்லை. மேலும் மேலும் இழைத்து இழைத்துச் சிறிதும் பெரிதுமான மணல் சிற்றில்களை உருவாக்கிய வண்ணமாய் இருக்கிறாள். சிறிதும் சோர்வு இல்லை. இது இவளுக்கு விளையாட்டு—காதல் விளையாட்டு.

இதனால்தான் மணிவாசகப் பெருமான்,

தென்பால் உகந்தாடும்
தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பால் உகந்தான்
பெரும்பித்தன் காணேடி!

என்று தமது திருவாசகத்தில் அருளிச் செய்கிறார். குமரகுருபரரின் மேலே சொன்ன பாட்டிற்கு முன்னமே சொல்லி வைத்த விளக்கம்போல் அமைந்திருக்கிறது திருவாசகப் பாட்டு.

குமரகுருபரர் சொல்லால் திரையிட்டுத்தான் சொல்ல வந்த இரகசியத்தைக் காட்டுகிறார்; எனினும் திரையை விலக்கிக்கொண்டு நாமும் பார்த்துவிடுகிறோம் அந்த இரகசியத்தையும்!

தாயுமானவர் கண்ட பரம நாடகம்

பரம நாடகத்தை சிந்தை திறைகொடுத்துச் சேவிக்கவேண்டும் என்கிறார் தாயுமானவர்.

அந்தரத்தே நின்றாடும்
ஆனந்தக் கூத்தனுக்குஎன்
சிந்தை திறைகொடுத்துச்
சேவிப்பது எந்நாளோ?

இப்படிச் சிந்தையைக் கொடுத்துப் பெறுவதுதான் என்ன?

தந்ததுஉன் தன்னை,
கொண்டதுஎன் தன்னை;
சங்கரா! ஆர்கொலோ
சதுரர்?

என்ற மாணிக்கவாசகரின் கொள்கைக் கிணங்க, வாணிபம் நடக்கிறது ஆண்டவனுக்கும் அடியாருக்கும்! என் சிந்தையைக் கொடுத்து உன்னைப் பெற்றேன்; இந்த வாணிபத்தில்—பேரத்தில், கெட்டிக்காரர் யாரோ?

'இதெல்லாம் விதண்டாவாதம். குயுக்திவாதம் என்று கருதுவோரும் உண்டு. இவர்களின் ஏகப்பிரதிநிதியாகக் கவிஞர் ஒருவர்,

ஸ்ரீரங்க நாதரையும்
தில்லை நடராசரையும்
பீரங்கி வைத்துப்
பிளந்தெறிவது எந்நாளோ?

என்று தாயுமானவரின் 'எந்நாள்'–கண்ணியிலேயே பேசுவதையும் கேட்டிருக்கிறோம்.

யோகநித்திரையில் அமர்ந்து லோகநன்மைக்காகத் தவம் கிடக்கும் காப்புத் தெய்வமும் தத்துவமும், லோக விடுதலைக்காக இடையீடின்றி அல்லும் பகலும் அனவரதமும் ஆடிக்கொண்டிருக்கும் விடுதலைத் தெய்வமும் ஆகிய இரு பெருந் தத்துவங்களை எந்தப் பீரங்கி கொண்டு எப்படிப் பிளப்பது?

இன்றைய விவேகிகளுக்கு இவ்வுண்மை புலப்படாமலிருப்பதற்குக் காரணமும் தாயுமானவரே காட்டியிருக்கிறார்.

பாக்கியங்கள் எல்லாம்
பழுத்து மனம்பழுத்தோர்
நோக்கும் திருக்கூத்தை
நோக்கும்நாள் எந்நாளோ!

என்று, எந்நாள் கண்ணியில் குறிப்பாக, இந்நாள் பகுத்தறிவுவாதிகளுக்குப் பதில் கிடைத்திருக்கிறது.

ஒரு பிரெஞ்சு நாத்திகன் பாதிரியார் ஒருவருக்கு அவருடைய தெய்வத்தையும் கொள்கையையும் பரிகசித்தும், நிந்தனை புரிந்தும் எழுதியிருந்தான். அதற்கு அவர் விடையாக, 'ஐயா உமக்குப் பாக்கியங்கள் எல்லாம் பழுத்திடுவதாக! கொஞ்சம் பண்பாடும் (மனமும்) பழுக்கட்டும்' என்று ஆசி கூறினாராம். இதை ஒரு திறவு கோலாகக் கொண்டு தாயுமானவரின் 'பாக்கியங்கள் எல்லாம்' என்ற கண்ணிக்கு விளக்கம் காண்போம்.

பாக்கியங்கள் எல்லாம் பழுத்திருந்தாலும், மனம் பழுக்காவிட்டால் உண்மை விளங்கப்போவதில்லை. மனம் பக்குவமாகப் பண்பட்டுப் பழுத்தவர்களுக்குத் தான் திருக்கூத்தின் இரகசியம் புலனாகும். அப்பொழுதுதான் ஞானக்குழந்தையாகித் திருக்கூத்தை நோக்குவார்களாம். கோபாலகிருஷ்ண பாரதியார் சொல்லுகிறபடி 'விதியின் எழுத்தைக் கிழித்தாச்சு!' என்ற நிலை இந்நிலையில் தான் ஏற்படுகிறது.

திருக்கூத்தை நோக்கியவர்களில், இராமலிங்க அடிகளை (1823-1874) கடைசி மகான் எனலாம். இவர் பழமை நோக்கும் புதுமை நோக்கும் ஒருங்கே பெற்றவர். பழமை என்றால் பழுத்த பழமை; புதுமை என்றால் புத்தம் புதிய புதுமை இவர் கண்ட திருக்கூத்தின் உட்பொருளிலே பழைய சமதரிசனத்திற்கும் இடம் உண்டு; புதிய பொதுவுடைமைத் தத்துவமாகிய சமதர்மத்திற்கும் இடம் உண்டு.

இவரது 'வெண்ணிலாக் கண்ணிகள் மேலே சொன்ன சிறப்பியல்பைச் சுட்டிக் காட்டுகின்றன:

அந்தரத்தில் ஆடுகின்ருர், வெண்ணிலாவே!-அவர்
ஆடுகின்றது எப்படியோ? வெண்ணிலாவே!
அம்பரத்தில் ஆடுகின்ருர் வெண்ணிலாவே!-அவர்
ஆடுகின்ற வண்ணம் என்ன? வெண்ணிலாவே!
அணுவில் அணுவாயிருந்தார்வெண்ணிலாவே!-எங்கும்
ஆகிநின்ற வண்ணம் என்ன? வெண்ணிலாவே!

அண்ட பகிரண்டமெல்லாம் வெண்ணிலாவே!-ஐயர்
ஆட்டம் என்றுசொல்வதென்ன? வெண்ணிலாவே!
அம்பரத்தில் ஆடுகின்ருர் வெண்ணிலாவே!-என்னே
ஆட்டுகின்ருர் இம்பரத்தே வெண்ணிலாவே!

இப்படிச் சரமாரியாக, பழமையும் புதுமையும் புதுப்புது புதுமையுமாக, தத்துவ விஞவிடைகள்— விஞ வெளிப்படையாகவும் விடை அதிலேயே மறை பொருளாகவும்—எழுகின்றன. பொழிகின்றன என்றே சொல்லலாம்.

கீதங்கள் பாடுதல்
ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம்உனைக்
கண்டறி வாரை!

என்று வருணிப்பதும் பொருந்தும், இத்திருக் கூத்தை நோக்கும் போது.

இவ்விதமாகக் காணுமல் காணும் திருக் கூத்தைத் தியானிப்பதாலும், சிந்தனையில் சிற்றம்பலம் அமைத்து அம்பலவாணனைக் கொலுவைப்பதாலும் பயன்தான் என்ன, பொருள் தான் என்ன? பயனும் பொருளும் அதுவே!

5. ஊர்த்வ தாண்டவம்

காளி இறைவனை 'ஆடு' என்று கட்டளையிட, அவனும் ஆடுகிறான். அவளும் ஆடுகிறாள். முதல் முதல் அவளுக்குக் கீழ்ப்படிந்து ஆடுவது போலத்தான் ஆடுகிறான். அவளுக்குக் குதூகலம்தான்.

பிறகு ஆடற் போட்டி. அவள் ஆரம்பத்தில் ஆடலைக் காண்கிறாள், பிறகு அதில் கலந்து கொள்கிறாள். போட்டி போடுகிறாள்.

இறைவன் நீண்டு விரிந்து நிமிர்ந்து ஊர்த்வ தாண்டவம் ஆடுகிறான். ஒரு கால் மேலே மேலே இன்னும் மேலே சென்ற வண்ணமாய் இருக்கிறது. ஒருகால் கீழேகீழே பாதாளாம் ஊடுருவிச்செல்லுகிறது; சென்ற வண்ணமாயிருக்கிறது.

எட்டுத் திக்கிலும் எட்டுத் தோள்கள் வீசி நின்று ஆடுவதற்குத் தோன்றுகின்றன. ஆனால்இடம் எங்கே? தோள் ஒன்றே எட்டுத் திக்குகளையும் போர்த்து விடுகிறது; இல்லை, பேர்த்து விடுகிறது!

காளியின் ஆவேசம் அடங்கி ஒடுங்கிப் போகிறது எப்படி எங்கிருந்துதான் காணப் போகிறாளோ? அவளுக்கு நிற்கத்தான் இடம் எங்கே? ஊர்த்வ தாண்டவ எல்லையை விட்டு ஏகுவதற்கும் இடம் இல்லையே என்று ஏங்குகிறாள். இது காளி கண்ட சிவநடனம்!

காளியும் சிவனும்

'இறைவனை ஆடல் கண்டருளிய அணங்கு' என்பது காளியின் ஆதிநிலை. 'ஆடு' என்று உத்தரவு போட்டதுமே வந்து விட்டது ஆபத்து, காளியின் திறல் ஒடுங்க அவள் இறைவனைச் சார்ந்து வாழ வேண்டியதாயிற்று. இதை நக்கீர தேவ நாயனர் பாடுகிருர்.

தாள்ஒன்ருல் பாதாளம் ஊடுருவித் தண்விசும்பில்
தாள்ஒன்ருல் அண்டம் கடந்து உருவி,-தோள் ஒன்ருல்
திக்கனைத்தும் பேர்க்கும் திறல்காளி காளத்தி
நக்கனைத்தான் கண்ட நடம்.

'காளியும் சிவனும்' காட்டும் உண்மைதான் என்ன? இறைவன் என்ற சொல்லுக்குத் 'தங்குபவன், எங்கும் தங்குபவன்' என்று பொருள். இப்பொருளை இறைவன் காளிக்குக் கற்பித்தது மட்டுமல்ல, தன் கடவுள் நிலையையும் கற்பிக்கிருன், அதாவது, எங்கும் பரவியிருக்கும் அந்தரியாமி நிலையோடு கடவுள் நிலையையும் (எல்லாவற்றையும் கடந்த நிலையையும்) கற்பிக்கிருன். காளிவாயிலாக நமக்கும் இந்த உண்மை கிடைத்து விடுகிறது.

கடவுள் தன் ஏகதேசமான அம்சத்தால் இந்த உலகமெங்கும் வியாபித்திருக்கிருனும். சர்வ வியாபக சக்தியோடு கடவுள்-சக்தி அடங்கிப் போய்விட வில்லை. அவன் அப்பாலுக்கு அப்பாலாய் இப்பாலுக்கு இப்பாலாய் இருக்கிருன். அண்டங்களெல்லாம் வியாபித்திருக்கும். அம்சத்தால் ஒரு சிறிதும் குறைவு படா

மலே கடவுள் நிலை முழுவதும் நிலை பெற்றிருக்கிற தாம். இது, 'என்னுடைய ஓர் அம்சத் துணுக்கால் அண்டம் முழுவதையும் நான் வியாபித்தும் குறைவு படவில்லை. நான் முழுக்க முழுக்க எல்லாவற்றையும் கடந்தும் நிற்கிறேன்; என்பது கீதாசாரியனின் வாக்கு

இத்தத்துவ நுண் பொருளை உணர்ந்து கொள்வது சிந்தனையாளர்களுக்குப் பனி மூடிய இமாலயத்தின் உச்சியில் மூச்சுத்திணற நிற்பது போன்ற உணர்ச்சி ஏற்படுகிறது. இதை மிகச் சிலரே உணர்ந்து கொள்வர்

இத்தகைய சிந்தனையைக் கலையாக்கிப் பலருக்கும் காட்டுகிறது ஊர்த்துவ தாண்டவப் பாட்டு.

காரைக்கால் பேய் கண்ட ஊர்த்வ தாண்டவம்

காரைக்காலம்மையார் காரைக்கால் பேயாகி ஊழிக் கூத்தை கண்டார் என்பர். மனிதனைப் பிணம் தூக்கித் திரியும் பேய் என்று சொல்லுகிறுர் ஒரு மேற்புல மெய்ஞானி. பிணத்தை உதறித்தள்ளி விட்டால், அவன் பேய் அல்லது ஆன்மாவாக நிற்கிறுன். அது தான் எதார்த்த மனிதன். உடம்பு பிணந்தான்; எதார்த்த மனிதனை மறைத்திருப்பது போலி மனிதர்; மரணத்தால் பிணம் வேறு, ஆன்மா வேறு என்ற நிலை ஏற்படுகிறதே என்ருல், மறு பிறப்பு வேருரு பிணத்தைத் தூக்கிவைக்கிறது ஆன்மா மீது! எனவே ஞானத்தால் மரணத்தால் அல்ல பேய் தனித்து நிற்க வேண்டும்- அதாவது ஆன்மா. இந்த நிலையை அடைந்தவர் காரைக்காலம்மையார்.

இவர் பேயாகிய நிலையில் ஊர்த்வ தாண்டவம் கண்ணுற்றார் எனலாம். இந்த ஊர்த்வ தாண்டவக் காட்சியைச் சிறிது நோக்கலாம்:

அடிபேரின் பாதாளம் பேரும்; அடிகள்
முடிபேரின் வான்முகடு பேரும்;—கடகம்
மறிந்தாடும் கைபேரில் வான்திசைகள் பேரும்;
அறிந்தாடும் ஆற்றாது அரங்கு.

ஊர்த்வ தாண்டவத்தில் அடிபெயரும்போதே பாதாளம் பேர்ந்துபோகுமாம். திருமுடி அசைந்ததும் வானத்து உச்சியும் பேர்ந்து போகுமாம். ஒரு கை மறிந்து ஆடும்போதே திக்கோடு திக்கந்தங்களும் பிளந்து போகிறதாம். அப்படியானால் ஆடும் அரங்கு அந்த ஆட்டத்தைத் தாங்காது; அறிந்து ஆடும்! இப்படிக் காரைக்கால் பேயார் அஞ்சுவதுபோல் அருளிச் செய்திருக்கும் பயபக்திப் பாட்டு இந்த ஊர்த்வ தாண்டவப் பாட்டு.

ஆறரை அடி உயரமுள்ள மனிதன் ஒருவன் ஒரு தாழ்ந்த குடிசைக்குள் குதிபோட்டு வருவானானால், அவனைப் பார்த்துக் கிண்டலாக, 'அப்பா, நம்ம வீட்டு முகட்டைப் பேர்த்து விடாதே!' என்று சொல்லக் கூடுமல்லவா? இங்கே ஆடுகிறவன் முடிக்குத்தான் சேதம்! அந்த ஊர்த்துவ தாண்டவமூர்த்தியின் ஆடரங்கிலோ, முடிக்குச் சேதமில்லை, அடிக்கும் சேதமில்லை; மறிந்தாடும் கைக்கும் சேதமில்லை. அரங்க மேடையே தகர்ந்து போகும்! — என்று அஞ்சுவதுபோல் நகைச்சுவையுடன் அமைந்திருக்கிறது இத்திருப்பாட்டு.

காரைக்கால் பேயார் அருளிச் செய்த அற்புதத் திருவந்தாதியில் வெகு அற்புதமாக அமைந்திருக்கிறது இப்பாட்டு. இறைவன் எங்குமாய் எல்லாமாகி அப்பாலும் இப்பாலுமாகி நிற்கின்ருன் என்பதும், அவனது சர்வ வியாபக நிலையால் சற்றும் குறைவுபடாது, சிறிதும் பாதிக்கப்படாது இருக்கிறது கடவுள் நிலை என்பதும் ஆகிய அதிநுட்பமான தத்துவ சிந்தனை, தனக்கு உரிய முழு வடிவமும் முழு மாணிக்கமாகிய இப்பாட்டிலே பெற்றிருப்பது போலக் காண்கிறது.

திருமூலரும் ஊர்த்வதாண்டவமும்

திருமந்திர மாலை என்ற திருமந்திரத்தை அருளிச் செய்த திருமூலரைத் தமிழ் செய்த திருமூலர் என்று கூறுவதுண்டு. வேதம் தமிழ் செய்த வித்தகர்கள் என்று வேறு வேறு பக்தர்களைப் போற்றுவது உண்டு. திருமூலரையோ, 'சிவபெருமானைத் தமிழ் செய்தவர்' என்று கூறலாம். 'அன்பு சிவம் இரண்டு என்பர் அறிவிலார்' என்று கூறும் இவர், தமிழும் சிவமும் இரண்டு அல்ல, ஒன்றே என்பதுபோல் திருமந்திரத்தை அருளிச் செய்திருக்கிருர்.

இவரும் நடராஜ தரிசனம் செய்து, ஊர்த்வ தாண்டவத்தையும் தரிசித்திருக்கிருர். இதற்கு,

ஆதிபரன் ஆட, அங்கைக் கனலாட,
ஓதும்சடை ஆட, உன்மத்தம் உற்ருட,
பாதிமதி ஆட, பாரண்டம் மீதாட,
நாதமோடு ஆடினன், நாதாந்த நட்டமே

என்ற பாட்டு ஒரு சான்ருகும்.

இறைவன் காளியோடு ஆடினுன் என்பதை,

காளியோடு ஆடிக் கனகாசலத்து ஆடிக்
கூளியோடு ஆடிக் குவலயத்தே ஆடி
நீடிய நீர்தீகால் நீள்வானிடையாடி
நாளுற அம்பலத்தே ஆடும் நாதனே.

என்ற பாட்டில் குறிப்பிடுகிருர்.

'பரமாண்டத்தூடே பரன் நடமாடுமே' என்று பாடுகிறவர்,

வேதங்கள் ஆட, மிகுஆகமம் ஆட
கீதங்கள் ஆடக் கிளர்அண்டம் ஏழாடப்
பூதங்கள் ஆடப் புவனம் முழுதாட
நாதங்கொண்டாடினுன் ஞானுனந்தக் கூத்தே

என்று அந்தரியாமியாய் இறைவன் ஆடும் சிவானந்தக் கூத்தையும் சுட்டிக் காட்டுகிருர்.

அகமும் புறமுமாய், அப்பாலும் இப்பாலுமாய் ஆடும் ஆட்டத்திற்கு ஆடரங்கு எது? பாடல் எது? வாத்தியம் முதலியன எவை? திருமூலர் தம் பாஷை யிலேயே, தம் சிவம் பழுத்த தமிழிலே, ஞானம் கூத் தாடும் தமிழிலே, பதில் தரட்டும்:

ஆனந்தம் ஆடரங்கு, ஆனந்தம் பாடல்கள்
ஆனந்தம் பல்லியம் ஆனந்த வாச்சியம்
ஆனந்த மாக அகில சராசரம்
ஆனந்தம் ஆனந்தக் கூத்து உகந்தானுக்கே!

திருமூலர் திருமந்திரத்தில் அற்புதமான மந்திரம் இது. வேத மந்திரம் போல் ஓதி ஓதி உணரத்தக்கது;

மூலமந்திரம்போல் ஆறுதலும் ஆனந்தமும் அளிக்கக்கூடியது.

பெயர் விழையாப் புலவர்கள்

ஊர்த்வ தாண்டவம் முதலிய ஆனந்த தாண்டவங்களைப் பாடிய பெயர் விரும்பாத புலவர்களும் உண்டு.

பூண்ட பறைஅறையப்
பூதம் மருள,
நீண்ட சடையான்
ஆடுமே,
நீண்ட சடையான்
ஆடும் என்ப,
மாண்ட சாயல்
மலைமகள் காணவே காணவே.

இது பறையின் முழக்கத்தால் ஏற்படும் விசை ஆட்டத்தைக் குறிப்பிடுகிறது. அந்த வேகத்தைக் கண்டு பூதங்கள் மிரண்டு போகின்றன. சடை நீண்டு நீண்டு, திக்கொடு திக்கந்தங்களிலும் பரவுகிறது. இதைக் காணும் உமையம்மை காணும்தோறும் புதிய புதிய அழகு பெற்று ஒளிர்கிருளாம்.

இதைக் காட்டிலும் விசையான ஆட்டம் ஒன்று வருணிக்கப்படுகிறது.

வரிகொள் அரவும்
மதியும் சுழல,
கரிகால் ஏந்தி
ஆடுமே;

கரிகால் ஏந்தி
ஆடும் இறைவன்
புரிபுன் சடைமேல்
புனலும் பிறழவே பிறழவே!

'சீவனுக்குள்ளே சிவமணம் பூத்தது' என்பர் திருமூலர். என்னே அதிசயம்! தமிழுக்குள்ளே சிவநடம் பூத்தது என்று சொல்லும்படி அமைந்திருக்கின்றன திருக்கூத்துப் பாடல்கள் பலவும்.

6. திருநடனம்
(தியானமும் தரிசனமும்)

நடராஜப் பெருமானைத் தியானிப்பவர்களுக்குப்பல திருப்பாடல்கள் துணை செய்யும். இவற்றுள் பிரசித்தமானது 'குனித்த புருவமும்' என்று தொடங்கும் அப்பர் தேவாரப்பாட்டு. வில்லைப்போல் மேலேறி வளைந்த புருவம் 'குனித்த புருவம்' என்று கூறப்படுகிறது. குனித்த புருவத்தை எடுத்துக் காட்டுகிறது பனித்த சடை. இது பற்றற்ற பரமயோகியின் நிலை.

கூத்தன் உருவம்

குனித்த புருவத்தை விளக்கமுறச் செய்கின்றன கொவ்வைக் கனி போன்ற சிவந்த வாயும் அதில் அரும்பும் புன்னகையும், பவளம் போல் மேனியைப் பால் போன்ற வெண்ணீறு நீறுபூத்த நெருப்பைப் போல் ஜொலிக்கச் செய்கிறது.

தூக்கிய திருவடி, குஞ்சித பாதம். இது இடதுதிருவடி. அருளால் அடியவரைத் தூக்கி ஆனந்தத்தில் அழுத்துவது. ஊன்றிய திருவடி, முயலகன் என்ற பூதத்தை நசுக்குகிறது. முயலகன் ஆணவத்தின் உருவம்.

ஒருகையில் உடுக்கை; இது அணுத் துகள்களை ஒன்று கூட்டும் என்பர், அஞ்சேல் என்று அமைந்த

கரம், (அந்தோ) எய்த்துப்போனோம்! அருள் செய் இறைவா!, என்று தஞ்சமென வந்து விழும் அடியார்களை அளித்து ஆதரிக்கிறது. ஒருகையில் அனல், இது அழிக்கிறது.

ஒரு புறம் உள்ள மான், துள்ளும் மனத்தைக் குறிப்பிடுகிறது. கூத்தப் பெருமான் அணிந்திருக்கும் புலித்தோல், அகங்காரத்தைக் குறிப்பிடும் கொல் புலித் தோல் நல்லாடை என்பது பெரியோர் வாக்கு. புலி போல் கொடியதாய் மூர்க்கமாய் நம்மை எதிர்க்கும் அகங்காரத்தைக் கொன்றே தீர வேண்டும், கூத்தப் பிரான் அருளால் என்பது குறிப்பு.

கோயில் சுடுகாடு,
கொல்புலித்தோல் நல்லாடை

என்ற அருளாளர் வாக்கில், ஆசாபாசங்களைச் சுட்டெரிக்க வேண்டும் என்ற குறிப்பைக் காண்கிறோம்.

தலையிலே கங்கை.

குளுமையால் ஆயாசம் தீர்ப்பது கங்கை, ஞானத்திற்கு அறிகுறி. கங்கையுடன் சந்திரனையும் தரித்திருக்கிறார். சந்திரன் ஆத்மாவின் மகிழ்ச்சிக்கு அறிகுறி.

நடராஜ ஓவியத்தையோ, விக்கிரகத்தையோ, பார்க்கும் போது, வெறும் ஓவியமாகவோ, பித்தளைப் பதுமையாகவோ பார்ப்பது சரியன்று. சித்திரத்தில் கலை வடிவம் கண்டு களிப்பது பொருத்தமே. ஆனால் நடராஜ தத்துவம் என்ற உட் பொருளையும் இதயக் கதவைத் திறந்து உட்புகச் செய்ய வேண்டும்.

சிதம்பர ரகசியத்தை நுணுகி நோக்குவோமானல் நமது உடம்பாகிய கோயிலில் உள்ளத்தைச் சித் சபையாகக் காணலாம். இறைவனை அந்தச் சித் சபையில் திருவடி தூக்கி ஆடும் நிலையில் தியானம் செய்யலாம். தியானம் முற்றித் தரிசனம் என்பர்.

வாழி திரு மன்றம்
கண்ட மலர்க் கண்கள்;
வாழி பெருமான்
புகழ்கேட்ட வான்செவிகள்;
வாழி அவனை
வணங்கும் முடிச்சென்னி;
வாழியரோ
சீர் பாடும் வாய்.

என்ற குமரகுருபர அடிகளின் அமுத வாக்குடன் ஆருத்ரா தரிசனம் காண்போம்.

திருமன்றம் கண்ட கண்கள் சாமானியக் கண்களா? மலர்க் கண்கள் என்று சிறப்பிக்கிருர். கூத்தன் புகழ் கேட்ட செவிகளோ வான் செவிகள். அவனை வணங்கும் தலைக்கு ஒரு முடி சூட்டுகிருர்—புரண்டு அழியும் சாதாரணக் கீரிடம் அன்று.

'வாழியரோ சீர் பாடும் வாய்' என்று பாட்டு முடிவு பெறுவதால் இச்சிறு நூலின் ஆசிரியனுன சிறுவனும் பேறு பெறுகின்ருன்; பெரும் பேறு. ஆனந்தக் கூத்தனின் சீர் பாடும் வாய் சிறப்பாகப் பேறு பெறுவது பொருத்தம்தானே.

பூந்தாமரை தொழுத பொன்

பெண், பிரார்த்தனைக்கு வந்தாள் நடராஜ சன்னி தியில், ஏதோ ஒரு மாறுதல் தனக்கு ஏற்படுவதாக உணர்ந்தாள்; உள்ளுக்குள்ளேயே.

உள்ளம் குளிர்ந்தது. உரோமம் சிலிர்த்தது உதடுகள் துடித்தன, இதயத்தில் எழுந்த பிரார்த் தனையை வெளியிடுவதற்காக ஆகும். பாஷை தள்ளாடியது; வர மறுத்து விட்டது.

வாய் சொல்லாததைக் கண்கள் சொல்லி முடிக்க ஆசைப் பட்டன. அவற்றில் நீர் அரும்பியது. அவள் தன்னை மறந்தாள்.

பிரார்த்தனை அருகில் கேட்க வில்லை; அம்பலத் தில் கேட்டது.

கிராமப் பெண். அவள் வயற்காடு வழியாக வந்தாள். ஒரு-பொய்கை. தாமரை மலர்ந்து, கதிர வனை நோக்கியது. 'கண்டதும் காதல்!' ஆயிற்று. அவனும் தன் ஆசைக் கதிர்களால் தீண்டினான்; தழுவிக் கொண்டான்.

அந்தத் தாமரையில் ஒரு புள். இது அலைக்க அது அசைந்தது. எல்லாம் ஆடல் வல்லான் அருள்! இந்தத் தீந்தாமரை, ஆடும் பூந்தாமரையை, அகக் கண்ணுக்கு இலக்காக்கியது.

கூத்தனைத் தரிசித்ததும், அந்த அடிமலரை நோக்கிப் பேசாத பேச்சாக விண்ணப்பம் செய்து கொண்டாள். அது என்ன? அவளுக்கே தெரியாது.

பெண்ணாக வந்தாள்; பொன்னாக மாறினாள்! இரும்பான உள்ளமும் உடம்பும் பொன்னாயின. என்னே பக்திக் காதலின் இரசவாதம்!

துரும்பான அடியேனையும் அந்தப் பொன் சிறிது பற்றிக் கொண்டது. திருமன்றம் கண்டேன். அவன் புகழ் கேட்டேன்.

அவன் அடிகளில் முடிவைத்தேன். அடியே முடி யாக வாய்த்தது. இந்த சிறு பணி வாயிலாக யான் பெற்ற பேறு தான் என்னே!

உள்ளம் குளிர,
    உரோமம் சிலிர்த்து, உரையும்
தள்ள, விழி நீர்அரும்பத்
    தான்மறந்தாள்—புள் அலைக்கும்
தீந்தா மரைவயல்சூழ்
    தில்லைத் திரு நடஞ்செய்
பூந்தா மரைதொழுத
    பொன்.